அருள்தரும்

# தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

| மலர்-1 Volume-1 | இதழ்-6 Issue-6 | 22 செப்டம்பர்-2025 22 September-2025 | விலை-20/- Price: 20/- |
|---|---|---|---|



## மகிமைகள் நிறைந்த

# நவராத்திரி

அருள்தரும்
# தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்

மாதம் தோறும்
இரு இதழ்களாக
வெளிவரும்
## அருள்தரும் தெய்வம்
இதழின் சந்தாதாரர்
ஆகுங்கள்

- 1 வருட சந்தா ரூ.399
- 2 வருட சந்தா ரூ.699
- 3 வருட சந்தா ரூ.999

## பரிசை அள்ளுங்கள்?

நிர்வாக அலுவலகம்

**PADMA MEDIA HOUSE**

No.116, EH Road, Gandhi Nagar ,
Tondiarpet, Chennai-600081

சந்தா செலுத்த அருகில் உள்ள க்யூஆர் கோட் ஸ்கேன் செய்யவும் மேலும்தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு சந்தாதாரர் ஆகுங்கள்

PhonePe
ACCEPTED HERE
Scan & Pay Using PhonePe App
MS PADMA MEDIA HOUSE

சந்தா மற்றும் அனைத்து விபரங்களுக்கும்
அலைபேசி எண்: 9337501889



## ஜென்மாதி ஜென்மத்தின்

# பாவம் போக்கும் வில்வ மரம்

வில்வமரத்தின் இலைகளைப் பார்த்தால் அவை மூன்று மூன்றாக சேர்ந்தபடி இருக்கும். இந்த வில்வத்திலும் மும்மூர்த்திகள் இருக்கின்றனர். வில்வத்தின் இடதுப்பக்க இலை பிரம்மா என்றும், வலதுப்பக்க இலை விஷ்ணு என்றும் நடுவில் இருப்பது சிவன் என்றும் சொல்லப்படுகிறது. வில்வமரம் ஒரு புனிதமான மரமாகும். இதன் தழை ஈஸ்வரனுக்கு பூஜை செய்ய பயன்படுகிறது.

வில்வ மரங்கள் குறிப்பாக சிவஸ்தலங்களில் மட்டுமே அதிகம் வளர்க்கப் படுகின்றன. வில்வ இலையுடன் தண்ணீரை கலந்தால் அது புனித நீராக ஈஸ்வரன் கோயில்களில் பயன்படுத்தப் படுகிறது.

சிவனுக்கு வில்வ இலை அர்ச்சனை மிகவும் விசேஷமானது. ஆதலால் வில்வ மரங்களில் கிடைக்கும் இலைகள் ஈஸ்வரனுக்கு பூஜை செய்ய பயன்படுகிறது. வில்வ இலைக்கு ஒரு தனிச்சிறப்பும் உள்ளது, ஒருமுறை பூஜைக்கு உபயோகித்த வில்வ இலைகளை அலம்பி தூயமைப்படுத்தி மறுபடியும் பூஜைக்கு உபயோகப்படுத்தலாமாம்.

பூஜைக்கு பரிக்கும் போது குளித்து உடல் சுத்தத்தோடு இருப்பதோடு மட்டும் உள்ளத் தூய்மையோடு பரித்தல் வேண்டும். ஒவ்வோரு இலையை பரிக்கும் போது சிவ நாமத்தை கூறியவாறு பரித்தல் வேண்டும். அசுத்தமான, சுடு காடு ஓரங்களில் இருக்கும் மரங்களில் இருந்து பரித்தல் கூடாது.

வில்வ மரத்தை வீட்டில் அவசியம் வளர்க்க வேண்டிய மரங்களில் ஒன்று. அவ்வாறு வளர்க்கப் படும் தெய்வீக தன்மை பொருந்திய மரங்களை தீட்டுள்ள பெண்களோ அல்லது தீட்டு விசேசங்களுக்கு சென்று வந்து குளிக்காமல் நிழலுக்காக அம்மரத்தடியில் நிற்பதுமே பாவமாகும். முடிந்தால் பசும் பால் கலந்து நீர் ஊற்றி வளர்ப்பது சிறப்பு. வில்வ மரத்தடியில் மலர்த்தூவி விளக்கேற்றி வழிபடுதல் மிகச் சிறப்பு.

ஜீவ வழிபாடு!

வில்வ மரத்தை முதன் முதலில் வீட்டில் வைப்பார்கள், செடியை வைத்து பின் பூமி தோஷம் நீங்க விபூதியை

சுத்த நீரில் கலந்து புதிதாக வைத்த வில்லவ மரத்தை சுற்றி தெளித்து ஓம் மூலி ஜீவலட்சுமி மூலி மகாதேவ மூலி உன் உயிர் உடலில் சேர்ந்து ஜீவனாயிருக்க சுவாகா என்று செல்லுக.

பௌர்ணமி நாள், வெள்ளிக் கிழமைகளில் லட்சுமி துதி கூறி கற்கண்டு, தேங்காய், பழம், தாம்பூலம் வைத்து வழிபடலாம். வில்வ விருட்சம் முன் அமர்ந்து விநாயகரை வணங்கி பிறகு

"ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஐம் வில்வ ரூபிண்யை
சௌ பாக்ய லட்சுமியை
தனதாண்ய கர்யை நமோ நம!

என்று துதிப்பதால் (16, 32, 54, 108 எண்ணிக்கையில்) அனைத்து வளமும் பெருகும்.

வில்வமரத்தை முறைப்படி விரதமிருந்து பூஜிப்ப வர்க்கு அனைத்து நன்மைகளும் உண்டாகும்.

ஒரு வில்வ இலையைக் கொண்டு இறைவனை அர்ச்சிப்பது இலட்சம் தங்க மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்வதற்கு சமமாகும்.

வில்வமரம் வைத்து வளர்ப்பவர் களுக்கு ஒருபோதும் நரகமில்லை.



பாவம் நீக்கி பலன்தரும் வில்வ மரம்.

ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த புண்ணியம் உண்டாகும்..

கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய நற்பலன் கிடைக்கும்.

108 சிவாலயங்களை வலம் வந்து தரிசித்த பலாபலன் உண்டாகும்.

வில்வ மரம் இருக்கும் இடம் மகாலட்சுமி வாசம் செய்யும் இடமாகும்.

வில்வ மரத்தின் கிளைகளே வேதங்கள். இலைகள் யாவும் சிவரூபம். வேர்கள், கோடி கோடி ருத்திரர்கள்.

ஒரு வில்வ தனத்தை சிவனுக்கு அர்ப்பணம் செய்வதால் மூன்று ஜென்ம பாவம் விலகும் என்கிறது.

இதை வளர்த்து வரும் அனைவருமே நலமாக இருப்பதாக கூறி உள்ளனர். வில்வம் வளர்த்தால் செல்வம் வளரும்.

வில்வ மரம் எங்கு வளர்க்கப்படுகிறதோ அங்கே மகாலட்சுமி நிரந்தரமாக வசிப்பாள்.

சிவ பூஜை சமயத்தில் வில்வத்தால் அர்ச்சனை செய்தால் தீய சக்திகள் அகன்று தோஷங்கள் மறைந்து பகவான் ஈசனது அருட்பார்வை கிடைக்கும்.

காசி முதல் ராமேஸ்வரம் உள்ள சிவ ஸ்தலங்களை சென்று வந்த பலன் உண்டாகும்.

ஒரு வில்வ இலை ஒரு தங்க பூவிற்கு சமம், ஒரு வில்வ தளம் சிவனுக்கு அர்பித்தால். மகா பாவங்களும் விலகி சகல பாக்கியங்கள் உண்டாகும்.

எவ்வித உயர்ந்த தேவலோக தங்க பூவும் வில்வத்திற்க்கு இணையாக முடியாது என்று கூறுகின்றனர். வில்வத்தினால் சிவ பொருமானுக்கு பூஜை செய்தால் சகல சக்திகளை தனுக்குள் கொண்ட சிவபொருமான் மிகவும் திருப்தி அடைகிறான் அவ்வாறு வணங்கும் பக்தனுக்கு வறுமையை தொலைத்து அவனது விருப்பங்களை நிறைவேற்றி வைக்கிறது வில்வம் மரம்.

அஸ்வமேதயாகம் செய்த பலன் உண்டாகும்.

கொலை செய்வதையே தொழிலாக கொண்டவர் களும் வில்வத்தை பற்றிக் கொண்டால் அவர்கள் பாவம் எல்லாம் தொலையும், உலகுக்குப் பொரும் பயனை விளைவிப்பார்கள் ஆகிவிடுவார்கள் என்று திருக்களத்தி புராணம் கூறுகிறது.

வேடனுக்கு மோட்சம்

ஒரு முறை காட்டில் ஒரு வேடன் வேட்டைக்குச் சென்றபோது, புலி ஒன்று அவனை விரட்டிக் கொண்டு வரவே அதனிடமிருந்து தப்பித்து ஒடி உயரமான ஒரு மரத்தின் மீது ஏறி அமர்ந்து கொண்டான். இருள் சூழ்ந்த பின்னும் மரத்தடியில் படுத்துக் கொண்டு புலி நகர்வதாயில்லை. இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருப்பதற்காக மரத்திலுள்ள இலைகளை ஒவ்வொன்றாகக் கீழே பறித்துப் போட்டுக் கொண்டிருந்தான் வேடன்.

விடிந்து நெடுநேரமாகிய பின்னும் கீழே படுத்திருந்த புலியின் மீது வேடன் பறித்துப் போட்ட இலைக் குவியல் மூடியிருந்ததால், புலி இருக்கிறதா இல்லையா என்பதே தெரியவில்லை. ஒரு வழியாகத் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கீழே இறங்கி வந்து இலைகளை விலக்கிப் பார்த்த வேடனுக்கு ஆச்சர்யம்.

அங்கு புலிக்கு பதிலாக சிவலிங்கம் இருந்தது. பிறகுதான் அவனுக்கு விளங்கியது. இரவு முழுதும் அவன் அமர்ந்திருந்தது வில்வ மரம். அன்றைய இரவு சிவராத்திரி. அவனையறியாமலே இரவு முழுதும் கண்விழித்திருந்து வில்வ இலைகளால் சிவலிங்கத்தை அர்ச்சித்ததால் அவனுக்கு மோட்சம் கிடைத்தது என்னும் புராணக்கதை இன்றும் சிவராத்திரி அன்று கூறப்படுகிறது.



– திருச்சி கே.கணேசன்



# சொந்தவீடு யோகம் அமைய.. செவ்வாய்க் கிழமை வழிபாடு..!

செவ்வாய் வருவாய் என்று சொல்வார்கள். செவ்வாய்க்கு உரிய தெய்வம் முருகப்பெருமான்.

செவ்வாய்க்கிழமை அன்று நமது வேண்டுதலை முருகனிடம் வைத்தால் அந்த வேண்டுதலை நிறைவேற்றிக் கொடுப்பார்.

தொடர்ந்து 9 செவ்வாய்க்கிழமைகளில் விரத மிருந்து முருகனை மனதார வழிபட்டு வந்தால், உங்களுக்கு செவ்வாய் தோஷம் இருப்பின் அதன் தீவிரம் குறைந்து நன்மை உண்டாகும் என்பது ஐதீகம்.

செவ்வாய்க்கிழமை அன்று வியாபாரம் செய்பவர் கள் ஒரு பொழுது செவ்வாய் வழிபாட்டை செய்து வந்தால் வியாபாரம் பெரிய அளவில் விருத்தி அடை யும். நல்ல தைரியத்தை கொடுத்து நாம் எடுத்து வைக்கும் எல்லா வியாபாரமும் வெற்றியை தரும்.

செவ்வாய்க்கிழமை அன்று காலையில் குளித்துவிட்டு, அருகில் இருக்கும் முருகப்பெருமான் கோவிலுக்கு சென்று வழிபட வேண்டும். பிறகு வீட்டுக்கு வந்ததும் விரதத்தை தொடங்க வேண்டும். வீட்டின் பூஜை அறையில் அமர்ந்து முருகனை நினைத்து, கந்தசஷ்டி கவசம், முருகப்பெருமானுக்கு உரிய தோத்திரங்கள், மந்திரங்கள் ஆகியவற்றை பாடி வழிபாடு



செய்ய வேண்டும். அதன்பின் மாலை மீண்டும் முருகன் கோவிலுக்கு சென்று வழிபட்டு விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். விரதமிருந்து அன்ன தானம் செய்வது மிகவும் சிறப்பான பலனைத் தரும். இப்படி 9 செவ்வாய்க் கிழமைகள் விரதம் இருந்து முருகனை வழிபட்டால், செவ்வாய் தோஷத்தி னால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் நீங்கிநன்மை உண்டாகும்.

செவ்வாய்க்கிழமை அன்று முருகனுக்குப் பிடித்த செந்நிற ஆடையை அணிந்து வழிபடுவது நல்லது.

வீட்டின் பூஜை அறையில் வேல் வைத்து வழிபாடு செய்வது மிகவும் சிறப்பு.

பலன்கள்:

- செவ்வாய் தோஷம் இருப்பின் அதன் தீவிரம் குறைந்து நன்மை உண்டாகும்.
- திருமணத் தடை நீங்கி மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும்.
- சொந்தவீடு இல்லாதவர்களுக்கு அதை கட்டிக் கொள்ளும் யோகம் உண்டாகும்.
- பூமி சம்பந்தமான சொத்துக்களில் லாபம் உண் டாகும்.
- பய உணர்வுகள் நீங்கி, தைரியம் மற்றும் தன்னம்பிக்கை பிறக்கும்.
- உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து, உடல் ஆரோக்கியம் மேம்படும்.

– எம். அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.



# புனிதங்கள் நிறைந்த புரட்டாசி மாத சிறப்பு

- புரட்டாசி சனிக்கிழமை விரத வழிபாடு மிகவும் பழமை வாய்ந்ததும், மகத்துவம் மிகுந்ததும் ஆகும்.
- ஜாதக அமைப்பின்படி சனி, புதன் திசை நடப்பவர்கள் எள் நல்லெண்ணெய் தீபம் போட்டு வழிபட தடைகள் அனைத்தும் நீங்கும். பாவங்கள் நீங்கி புண்ணியமும் சுபயோக சுபங்களும் கூடி வரும்.
- புரட்டாசி மாதத்தில் இறைவனின் திருவிழாக்கள் பல நடக்கும். திருப்பதியில் பிரம்மோற்சவம் நடப்பது போலவே, பல பெருமாள் கோயில்களிலும் வருடாந்திர திருவிழாக்கள் நடைபெறுகின்றன.
- திருப்பதி வெங்கடாசலபதியைக் குலதெய்வமாகக் கொண்டுள்ள குடும்பங்களில் புரட்டாசி மாதம் மாவிளக்கு ஏற்றி திருவாராதனம் செய்வது வழக்கம்.
- புரட்டாசி சனிக்கிழமையில் தான் சனிபகவான் அவதரித்தார். அதன் காரணமாக, அவரால் ஏற்படும் கெடுபலன்கள் குறைய காக்கும் கடவுளான திருமாலை வணங்குவது வழக்கத்தில் வந்தது.
- புரட்டாசி சனிக்கிழமைகளில் பெருமாளை வழிபட்டால் எல்லாவிதமான கஷ்டங்களும் நீங்கி வளமான வாழ்வு கிட்டும் என்பது இந்து மதத்தின் மரபு வழி நம்பிக்கை.
- விஷ்ணுவின் அருள்பெற உகந்த மாதமாக புரட்டாசி திகழ்கிறது.
- புரட்டாசி மாதத்தை எமனின் கோரைப் பற்களுள் ஒன்றாக அக்னி புராணம் குறிப்பிடுகிறது.

எமபயம் நீங்கவும், துன்பங்கள் விலகவும் புரட்டாசி மாதத்தில் காத்தல் கடவுளான விஷ்ணுவை வணங்க வேண்டும்.

❖ புரட்டாசி சனிக்கிழமைகளில் யாருக்கும் கடன் கொடுக்கவும் கூடாது. கடன் வாங்கவும் கூடாது. ஆனால் தர்மம் நிறையச் செய்யலாம்.

❖ காகத்திற்கு அன்று ஆலை இலையில் எள்ளும் வெல்லமும் கலந்த அன்னம் வைத்தால் சனியின் தாக்கம் நீங்கும்.

❖ புரட்டாசி சனிக்கிழமையன்று சிவாலயங்களுக்குச் சென்று சனி பகவானை வழிபட்டு வணங்கினால், சனி தோஷம் நீங்கும்.

❖ புனிதமிக்க புரட்டாசி மாதத்தில் வரும் விரதங்கள் புண்ணிய பலன் அதிகம் தரும் என்பது ஐதீகம். ஜேஷ்டா விரதம், மகாலெட்சுமி விரதம், தசாவதார விரதம், கதளி கவுரிவிரதம், அநந்த விரதம், பிரதமை, நவராத்திரி பிரதமை, ஷஷ்டி, லலிதா விரதம் போன்றவை விசேஷமானவை.

❖ புரட்டாசி சனிக்கிழமைகளில் ஏதேனும் ஒரு நாளில் சிலர் திருப்பதிக்குச் சென்று தமது காணிக்கையைச் செலுத்தி வர வேண்டும்.

❖ ராகு, கேதுவால் ஜாதகத்தில் உள்ள காலசர்ப்ப தோஷம், நாகதோஷம், மாங்கல்ய தோஷம், தாரதோஷம் போன்ற பலசர்ப்ப சாப தோஷங்கள் யாவும் புரட்டாசி மாதம் கருடவழிபாடு செய்வதால் சூரியனைக் கண்ட பனிபோல் பறந்தோடும்.

❖ சூரியபகவானின் இச்சா சக்தியாகிய உஷாதேவியிடம் சூரியனுக்கு புத்திரனாக இச்சையின் வடிவமான சனீஸ்வரன் தோன்றினான்என்பது புராணம். இதனால் புரட்டாசி சனிக்கிழமை வழிபாட்டிற்கு விசேஷமானது.

❖ புரட்டாசிக்கு இருக்கும் முக்கியத்துவம், அது பித்ரு தேவதை வழிபாடு, இறை வழிபாடு, சக்தி வழிபாடு என அனைத்து அம்சங்களையும் அடக்கியிருக்கிறது என்பதே. பித்ருக்களை வழிபடும் மஹாளயம், பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் நவராத்திரி இவையும் சேர்ந்து புரட்டாசிக்குப் பெருமை சேர்க்கிறது.

❖ பெருமாளின் அம்சமாக கருதப்படும் புதனுடைய வீடு கன்னி. இந்த கன்னி ராசியில் சூரியன் அமர்வது புரட்டாசி மாதத்தில்தான். ஆகவே இந்த மாதத்தில் பெருமாளுக்கு வேண்டிய பஜனைகள் பிரம்மோற்சவங்கள் நடைபெறுகின்றன. புதனுக்கு நட்பு கிரகம் சனி பகவான். அதனால்தான் புரட்டாசி மாதத்தில் வரக்கூடிய சனிக்கிழமைகள் விஷேசமாக கொண்டாடப்படுகிறது.



❖ புரட்டாசி மாதத் திருவோணம், திருப்பதி மலையப்ப சுவாமி தன்னை வெளிப்படுத்திக் கொண்ட தினம் என்றால், புரட்டாசி சனிக்கிழமையிலோ சனிபகவான் அவதரித்து புரட்டாசிக்கு முக்கியத்துவம் தந்துவிட்டார். அதன் காரணமாக சனிபகவானால் ஏற்படும் கெடுபலன்கள் குறைய, காக்கும் கடவுளான திருமாலை வணங்குவது மரபாகிவிட்டது. இதற்காகத்தான் புரட்டாசி சனி விரதத்தை பக்தர்கள் வழி வழியாக கடைபிடிக்கின்றனர்.



❖ புரட்டாசி சனிக்கிழமை பெருமாளுக்கு “தளியல்” போடுவது வழக்கம். முடியாதவர்கள் 1வது,5வது சனிக்கிழமையில் போடுவார்கள். பெருமாள் பாயாசப் பிரியர் என்பதால் பாயாசம் செய்வது முக்கியமானதாகும்.

- A.S.Govinda rajan
Kodambakkam

# தர்ப்பணம் செய்யும் முன் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள்

- தர்ப்பணம் செய்யும் நபர் தர்ப்பணம் செய்யும் முன்பாக அந்த மாதத்தில் மற்ற இடங்களில் நடைபெறும் எந்த ஒரு பூஜைகளிலும் ஹோமங்களிலும், ஆலய நிகழ்ச்சிகளிலும் தனது பெயர் சொல்லி சங்கல்பம் செய்து கொள்ளக்கூடாது.
- பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்ய வேண்டிய நாளன்று, பித்ருக்களுக்குதர்ப்பணம் செய்து மூடிக்கும் வரை, வீட்டில் தெய்வ சம்பந்தமான பூஜைகளை நிறுத்தி வைத்து விட்டு பித்ருக்களுக்குதர்ப்பணம் செய்து முடிந்த பின்னர் தினசரி செய்ய வேண்டிய தெய்வ சம்பந்தமான பூஜைகளைச் செய்ய வேண்டும்.
- சூரியனும், சந்திரனும் ஒன்றாக இணைந்திருக்கும் நாளான அமாவாசை அன்று பித்ருக்களுக்கு பசியும் தாகமும் அதிகமாக ஏற்படும் என்று தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன.
- அமாவாசை திதியன்று ஒவ்வொரு வீட்டு வாசலிலும் அந்தந்த வீட்டு பித்ருக்கள் வந்து நின்று கொண்டு தங்களுக்குத் தரப்படும் எள் கலந்த தண்ணீரை பெற்றுக் கொள்வதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நம்பப்படுகிறது. அன்றைய தினம் வீட்டில் தர்ப்பணம் செய்து அவர்களுக்கு எள் கலந்த தண்ணீரை தரப்படவில்லை என்றால் அவர்கள் ஏமாற்றமடைந்து வருத்தப்பட்டு கோபத்தோடு செல்கிறார்கள் என்றும், ஒரு சில பித்ருக்கள் சாபம் கூட தந்து விட்டுச் செல்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.


5. ஒரு வருடத்தில் பித்ருக்களுக்குதர்ப்பணம் செய்ய வேண்டிய நாட்கள் மொத்தம் தொன்னூற்று ஆறு நாட்கள். இவைகளில் 14 மன்வாதி நாட்கள், யுகாதி நாட்கள் 4, மாதப்பிறப்பு நாட்கள் 12, அமாவாசை 12, மகாளய பட்சம் 16, வ்யதீபாதம் 12, வைத்ருதி 12, அஷ்டகா 4, அன்வஷ்டகா 4, பூர்வேத்யு 4 நாட்கள். இந்த நாட்களில் செய்யப்படும் தர்ப்பணத்தால் பித்ருக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

- பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்ய வேண்டிய நாளன்று, பித்ருக்களுக்குதர்ப்பணம் செய்து மூடிக்கும் வரை, வீட்டில் தெய்வ சம்பந்தமான பூஜைகளை நிறுத்தி வைத்து விட்டு பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்து முடிந்த பின்னர் தினசரி செய்ய வேண்டிய தெய்வ சம்



பந்தமான பூஜைகளைச் செய்ய வேண்டும்.

- சூரியனும், சந்திரனும் ஒன்றாக இணைந்திருக்கும் நாளான அமாவாசை அன்று பித்ருக்களுக்கு பசியும் தாகமும் அதிகமாக ஏற்படும் என்று தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன.
- அமாவாசை திதியன்று ஒவ்வொரு வீட்டு வாசலிலும் அந்தந்த வீட்டு பித்ருக்கள் வந்து நின்று கொண்டு தங்களுக்குத் தரப்படும் எள் கலந்த தண்ணீரை பெற்றுக் கொள்வதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுநம்பப்படுகிறது. அன்றைய தினம் வீட்டில் தர்ப்பணம் செய்து அவர்களுக்கு எள் கலந்த தண்ணீரை தரப்படவில்லை என்றால் அவர்கள் ஏமாற்றமடைந்து வருத்தப்பட்டு கோபத்தோடு செல்கிறார்கள் என்றும், ஒரு சில பித்ருக்கள் சாபம் கூட தந்து விட்டுச் செல்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.
- ஒரு வருடத்தில் பித்ருக்களுக்குதர்ப்பணம் செய்ய வேண்டிய நாட்கள் மொத்தம் தொன்னூற்று ஆறு நாட்கள். இவைகளில் 14 மன்வாதி நாட்கள், யுகாதி நாட்கள் 4, மாதப்பிறப்பு நாட்கள் 12, அமாவாசை 12, மகாளய பட்சம் 16, வ்யதீபாதம் 12, வைத்ருதி 12, அஷ்டகா 4, அன்வஷ்டகா 4, பூர்வேத்யு 4 நாட்கள். இந்த நாட்களில் செய்யப்படும் தர்ப்பணத்தால் பித்ருக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.
- ஒருவன் தனது தாய் தந்தைக்கு சிரார்த்தம் செய்யாமல் எனக்குச் செய்யும் பூஜைகளை நான் ஏற்றுக் கொள்வதில்லை என விஷ்ணுவும் சிவனும் கூறியுள்ளனர்.
- நமது பித்ருக்களிடத்தில் சிரார்த்தத்தை சிரத்தை யுடன் செய்வதாகவும், நல்ல உயர்ந்த ஆடை, தீர்த்த பாத்திரம் சிரார்த்தத்தில் வாங்கித் தருவதாகவும், பிரார்த்தனை செய்து கொண்டு அவ் வாறே சிரார்த் தத்தை நடத்தினால் நிச்சயம் உங்கள் விருப்பம் நிறைவேறும். விரும்பிய பலன் கைகூடும்.
- ஒரே நாளில் ஏராளமான பித்ருக்களுக்கு தனித்தனியாக பல பேர் சிராத்தம் செய்யும்போது சிரார்த்த உணவு அவரவர்களின் பித்ருக்களுக்கு எவ்வாறு சரியான முறையில் சென்றடைகிறது என்ற சந்தேகம் சிலருக்கு ஏற்படும். இதை கருத்தில் கொண்டுதான் மறைந்த முன்னோர்களின் கோத்ரத்தையும் பெயரையும் தர்ப்பணம் செய்யும்போது சொல்கிறார்கள். இதனால் ஒருவர் கொடுக்கும் தர்ப்பணம் அவரவர்களுக்கு சரியாக சென்றடையும்.
- மகாளயபட்சம் 15 நாட்களும் பித்ருகளுக்கு தாகமும், பசியும் மிக அதிகமாக இருக்கும். அதனால் அவர்கள் அருளைப் பெற வேண்டும். அந்த 15 நாட்களில் உறவினர்கள் இறந்து விட்டால் நாம் சிரார்த்தம் செய்ய வேண்டாம் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆனால் பிறகு கட்டாயமாகச் செய்ய வேண்டும்.
- பித்ரு வர்க்கம், மாத்ரு வர்க்கம் பித்ரு காருணீக வர்க்கம் என்று பித்ருக்கள் மூன்றுவகைப் படுத்தப்பட்டுள்ளார்கள். அதாவது அப்பா வகையை சார்ந்த பித்ருக்கள் பித்ருவர்க்கம் எனப்படுவார்கள். அம்மா வகையை சார்ந்த பித்ருக்கள் மாத்ருவர்க்கம் எனப்படுவார்கள். சித்தப்பா, மாமா, குரு, நண்பர்கள் காருணீக வர்க்கம்எனப்படுவார்கள். இவர்களை நினைவு கூறி தர்ப்பணங்களை செய்ய வேண்டும்.
- நமக்காக எத்தனையோ கஷ்டங்களை தாங்கிய நம் பித்ருக்களுக்கு, மகாள பட்சம், அமாவாசை போன்ற நாட்களில் வெங்காயம், பூண்டு, வாசனை திரவியங்கள் போன்றவை வேண்டாம்.
- சாஸ்திரப்படி, சிரார்த்த காரியங்கள் செய்பவர் திருமணம் உள்ளிட்ட விழாக்களிலும் மற்றவர் வீடுகளில் உணவு, உண்ணக்கூடாது.
- துவாதசி பன்னி ரெண்டாம் நாளன்று பித்ரு பூஜை செய்பவன் சொர்ணலாபம் பெறுவான்.



# சுகப்பிரசவம் அருளும் தாயுமானவர் சுவாமி

திருச்சி மலைக்கோட்டையின் மத்தியில் அமைந் துள்ளது தாயுமானவர் சுவாமி திருக்கோயில். இத்திருக் கோயில் ஈசனே தாயாக வந்து சுகப்பிரசவம் பார்த்ததால் தாயுமான சுவாமி என்று அழைக்கப்படுகிறார். இங்குப் பிரார்த்தனை செய்யும் கர்ப்பிணிப் பெண்களுக்குச் சுகப்பிரசவம் உண்டாகும். முன்னொரு காலத்தில் திரி சிரா மலையில் தனகுப்தன் என்னும் வணிகன் தனது மனைவி இரத்தினாவதியுடன் வாழ்ந்து வந்தான்.

இந்த தம்பதியர் செவ்வந்தி நாதர் மீது தீராத பக்தி கொண்டவர்கள். இரத்தினாவதி தன் பேறு காலம் நெருங்க, உதவிக்குத் தன் தாயை அழைத்திருந்தாள். அவளது தாயாரும் மகள் இல்லம் சேர்வதற்காகக் காவிரி ஆற்றைக் கடக்க முற்பட, அப்போது பெய்த பெருமழையால் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோட, தாயாரால் உரிய நேரத்தில் வர இயலவில்லை. இரத்தி னாவதி சிவபெருமானை வேண்டியதையடுத்து, செவ்வந்தி நாதரே அவரது தாயைப் போல் வந்து ரத்தினாவதிக்கு பேறு கால உதவிகள் அனைத்தையும் செய்தார்.

தாயையும், பிறந்த ஆண்மகனையும் ஏழு தினங்கள் தக்கவாறு கவனித்துக் கொண்டார். இரத்தினாவதியின் உண்மையான தாயார் வந்ததும் தாயுமானவராக வந்த ஈசன், மறைந்து, ரிஷப வாகனத்தில் மட்டுவார் குழலம்மையுடன் அனைவருக்கும் காட்சி கொடுத்து மறைந்தார். இறைவன் கர்ப்பிணிப் பெண்ணிற்குத் தாயாக இருந்து உதவிபுரிந்தமையால் அன்னாளில் இருந்து தாயுமான வர் என அழைக்கப் படுகிறார்.

இந்நிகழ்ச்சியை நினைவூட்டும் விதமாக இன்றும் ஒவ்வோர் ஆண்டும் திருச்சி மலைக் கோட்டையில் உள்ள தாயுமானவர் கோயிலில் சித்திரை பிரம்மோற்சவ ஐந்தாம் நாள் விழாவில் செட்டிப் பெண் மருத்துவம் என்ற நிகழ்ச்சி கொண்டாடப்படுகிறது. இரத்தினாவதியின் வழி வந்த குலத்தினர் இந்தத் திருவிழாவை இப்போதும் விமரிசையாக நடத்துகிறார்கள்.

இந்த விழாவில் கலந்து கொள்ளும் கர்ப்பிணிப் பெண்களுக்குச் சுகப்பிரசவ மருந்து வழங்கப்படுவதும் விசேஷம். ஒரு தாய் தன் மகளுக்குச் செய்ய வேண்டிய பிரதான கடமை, அவள் பிரசவத்திற்கு உதவுவதே. அத்தகைய அருஞ்செயலைச் செய்த நாதன் தாயுமானவன் என்பதால், கர்ப்பிணி ஸ்திரீகளின் கவலைகளைப் போக்கும் தலமாக இது விளங்குகிறது. இங்குத் தாயுமானவனை எண்ணி வேண்டிக் கொண்டால், சுகப்பிரசவமாகும் என்பது நம்பிக்கை.

சுகப்பிரசவ ஸ்லோகம்: கர்ப்பிணிகள் தாயுமானவர், அம்பிகையை வேண்டி, கீழேயுள்ள ஸ்லோகத்தை தினமும் 3 முறை சொல்லி, வழிபட்டால் சுகப்பிரசவம் ஆகும் என்பது நம்பிக்கை.

– சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி





# லலிதா சகஸ்ரநாமம் ஏன் படிக்க வேண்டும்?

லலிதா சகஸ்ரநாமத்தைப் பாராயணம் செய்யும் போது ஆன்மிகம் பற்றிய விழிப்புணர்வு மந்திரங்கள் தந்திரங்கள், பிரபஞ்சத்தின் படைப்பு ரகசியங்கள் என்று முழுமையான ஞானம் உருவாகும்.

சகஸ்ரநாமம் என்பது அன்னையின் ஆயிரம் பெயர்கள். லலிதா சகஸ்ரநாமத்தைப் பாராயணம் செய்யும்போது லலிதாம்பிகையின் பெருமைகள் மட்டு மல்ல, ஆன்மிகம் பற்றிய விழிப்புணர்வு மந்திரங்கள் தந்திரங்கள், பிரபஞ்சத்தின் படைப்பு ரகசியங்கள் என்று முழுமையான ஞானம் உருவாகும்.

சரஸ்வதியின் குருவான ஹயக்ரீவர் அகத்திய மகரிஷிக்கு லலிதா சகஸ்ரநாமத்தின் பெருமைகளை பின்வருமாறு கூறுகிறார்.

தேவியின் ஆயிரம் நாமங்களை உமக்குக் கூறி னேன். இவை ரகசியங்களுள் ரகசியமானது.

இதைப் போன்ற துதி ஒன்றுமில்லை. இது நோய்களைப்போக்கும். செல்வத்தை அளிக்கும். அபமிருத்யுவைப் போக்கும். (அப மிருத்யு என்றால்

அகால மரணம் ) நீண்ட ஆயுள் தரும்.

பிள்ளைப் பேறு இல்லாதவர்களுக்கு பிள்ளைச் செல்வம் தரும்.

கங்கை முதலியப் புண்ணிய நதிகளில் முறைப்படி பலதடவை நீராடுதல், காசியில் கோடி லிங்கப் பிரதிஷ்டை செய்தல், க்ரஹன காலத்தில் கங்கைக் கரையில் அசுவமேத யாகம் செய்தல், பஞ்ச காலங்களில் நீர் வசதியற்ற இடங்களில் கிணறு வெட்டுதல், தொடர்ந்து அன்னதானம் செய்தல், இவை எல்லாவற்றையும்விட மிகுந்தப் புண்ணியமானது லலிதா சகஸ்ரனாமப் பாராயணம்.

இது பாவத்தை நீக்கும். பாவத்தை நீக்க இதனை விட்டு வேறு உபாயம் தேடுபவன் பயனில்லாதவன்.

பௌர்ணமியன்று சந்திர பிம்பத்தில் தேவியை தியானம் செய்து வழிபட்டு இதனைப் படிக்க நோய்கள் நீங்கும்.

பூத பிசாச உபாதைகள் விலகும். இதனைப் பாராயணம் செய்யும் பக்தனின் நாவில் சரஸ்வதி தேவி நர்த்தனம் ஆடுவாள்.

எதிரிகளை பேசமுடியாது வாக்ஸ்தம்பம் செய்து விடுவாள். அரசனே எதிர்த்தாலும் அன்னையின் பக்தனிடம் தோல்வி அடைவான். இதனைப் பாரா யணம் செய்பவன் பார்வை பட்டாலே தோஷங்கள் விலகிவிடும்.

ஸ்ரீ வித்யை போன்று மந்திரமோ, ஸ்ரீ லலிதாம்பி கையைப் போன்று தேவதையோ, லலிதா சகஸ்ரநாமம் போன்று ஸ்தோத்திரமோ உலகில் இல்லை.

பூர்வ ஜென்ம புண்யத்தால் மட்டுமே இதனைப் பாராயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். கடைசிப் பிறவியாக இருந்தால் மட்டுமே ஸ்ரீவித்யா ஜெபமும், சகஸ்ரநாம பாராயணமும் செய்யமுடியும்.

தேவியின் அருளின்றி யாரும் இதனைப் பெற முடியாது “ என்றெல்லாம் பலவாறாக பலச்ருதி என்ற பகுதியில் ஹயக்ரீவர் அகத்தியருக்கு உப தேசிக்கிறார்.

லலிதா சகஸ்ரநாமத்தில் இன்னொரு சிறப்பு இதைப் பாராயணம் செய்யும்போது நமது சமயத்தின் அனைத்து கடவுளையும் வழிபட்ட புண்ணியம் நமக்கு சேரும்.

எனவே லலிதா சகஸ்ரநாமத்தின் பொருள் அறிந்து பாராயணம் செய்ய முயலுங்கள், எதை அடைய விரும்புகிறீர் களோ, அது தானாய் வந்து சேரும்.

அகத்திய முனிவருக்கு லலிதா சகஸ்ர நாமத்தின் பெருமையைப் பற்றி எடுத்துக்கூறினார் ஹயக்கிரீவர்.

இதைக்கேட்ட அகத்தியர் பெரிதும் மகிழ்ந்து, ”லலிதா சகஸ்ரநாமத்தை எந்த தலத்திற்கு சென்று கூறினால் அன்னை யின் அருள் முழுமையாக கிடைக்கும்?”என கேட்க அதற்கு ஹயக்கிரீவர், “பூலோகத்தில் அன்னை மனோன்மணியாக வீற்றிருக்கும் திருமீயச்சூர் சென்று அங்கு சகஸ்ரநாமத்தை கூறி அன்னையை வழிபடவும்” என்றார்.

அகத்தியர் உடனே தன் மனைவி லோபமுத்திரை யுடன் திருமீயச்சூர் சென்று லலிதாம்பிகையை தரிசித்து, லலிதா சகஸ்ரநாமம் சொன்னார். அம்பாள் மகிழ்ந்து அத்தம்பதிகளுக்கு நவரத்தினங்களாக தரிசனம் தந்தாள்.



ஸ்ரீ அம்பாள் அருளாளே இன்றைய நாளும் திரு நாளாகட்டும்!!

சௌஜன்யம்..!

அன்யோன்யம்..!!

ஆத்மார்த்தம்..!

தெய்வீகம்..! பேரின்பம்...!! அனைத்தும் நிறைந்த நாளாக அமையட்டும்.

– உமா வெங்கடேசன்.

## பித்ரு தோஷத்தை போக்கும் பூவாளூர் பிள்ளையார்



பித்ருதோஷ நிவர்த் திக்கு ஏற்ற தலமாக பூவாளூர் விளங்குகின்றது.

தென் புலத்தாரின் ஆன்மா சாந்தியடைய, அவர்கள் இறந்த நாளில் ஆண்டுதோறும் திதி கொடுக்க வேண்டும்.

ஏதேனும் காரணத்தால் திதி கொடுப்பது தவறிப் போனால், அமாவாசை நாள்களில் பூவாளூர் வந்து, அருகில் ஓடும் கயா பல்குனி (தற்போது இந்த ஆறு “பங்குனி ஆறு’ என்று அழைக்கப்படுகிறது) ஆற்றில் நீராடி, திதி கொடுக்கலாம். பின்பு இக்கோயிலில் உள்ள வெள்ளை விநாயகருக்கு அருகம்புல் அர்ச்சனை செய்தால், “பித்ரு தோஷம்‘ நீங்கும் என்பது ஐதீகம்.

# மஹாசக்தியை வணங்கிடுவோம்



நவராத்திரி என்பது மிகவும் மகிமை வாய்ந்த பண்டிகை. கொலு வைக்கிறோமோ இல்லையோ இந்த ஒன்பது நாட்களும் தேவியை பூஜை செய்தால் கிடைத்தற்கு அரிய பாக்கியங்கள் அனைத்தும் பெறலாம் என்று கூறப்படுகிறது.

தேவியானவள் பரா, பச்யந்தி, மத்யமா, வைகரீ என்று நான்கு ரூபமாய் வழிபடப்படுகிறாள் என்று புராணங்கள் கூறுகின்றன.

புராணங்களும் ஆகமமும் ஆதரிப்பது சக்தியையே. சக்தி யானவள், இச்சாசத்தி, க்ரியா சக்தி, ஞான சக்தி, தான சக்தி, கான சக்தி என்று பல வகை களில் துதிக் கப்படுகிறாள்.

நவராத்திரி நாட்களில் முதல் மூன்று நாட்கள் துர்கையையும், அடுத்த மூன்று நாட்கள் லட்சுமி யையும், அடுத்த மூன்று நாட்கள் சரஸ்வதியையும் வழிபாடு செய்கிறோம்.

இந்த நாட்களில் கன்னியா பூஜை செய்வது மிகவும் உகந்ததாக கருதப்படுகிறது. அதாவது இரண்டு வயது முதல் பத்து வயது வரை உள்ள பெண் குழந்தைகளை அம்பாளாக பாவித்து அவர்களுக்கு பூஜை செய்ய வேண்டும்.

முதல் நாள் இரண்டு வயது குழந்தையை குமரிகா என்ற பெயரிலும்,



இரண்டாம் நாள் மூன்று வயது குழந்தையை த்ரிமூர்த்தி என்கிற பெயரிலும்,

மூன்றாம் நாள் நான்கு வயது குழந்தையை கல்யாணி என்கிற பெயரிலும், நான்காம் நாள் ஐந்து வயது குழந்தையை ரோகிணி என்கிற பெயரிலும்,

ஐந்தாம் நாள் ஆறு வயது குழந்தையை காளிகா என்கிற பெயரிலும், ஆறாம் நாள் ஏழு வயது குழந்தையை சண்டிகா என்கிற பெயரிலும், ஏழாம் நாள் எட்டு வயது குழந்தையை சாம்பவி என்கிற பெயரிலும், எட்டாம் நாள் ஒன்பது வயது குழந்தையை துர்கா என்கிற பெயரிலும், ஒன்பதாம் நாள் பத்து வயது குழந்தையை சுபத்ரா என்கிற பெயரிலும் பூஜிக்க வேண்டும்.

கன்னிகையை ஆசனத்தில் அமர்த்தி புஷ்பத்தால் அர்ச் சித்து, பூஜை முடிந்து நைவேத் தியம் செய்து, கற்பூர ஆரத்தி முடிந்த பிறகு, அவளுக்கு ஆகாரம் கொடுத்து, கடைசியில் வெற்றிலை,பாக்கு, பழம், தேங்காயுடன், பாவாடை, ரவிக்கை மற்றும் மங்கலப் பொருட்கள் வைத்து கொடுத்து வழி அனுப்ப வேண்டும்.

இவ்வாறு கன்னிகைகளை பூஜிப்பதால் ஆயுள், ஆரோக்கியம் ஐஸ்வர்யம் அனைத்தும் பூரணமாக கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

நவராத்திரி பண்டிகையானது எப்பொழுது முதல் கொண்டாடப்பட்டு வருகிறது என்பதற்கு சரியான வருடக் கணக்கு இதுவரை கூறப்படவில்லை, வேதகாலம் முதலே சக்தி வழிபாடு இருந்து வந்தது என்றும், பின் நாட்களில் தேவி மகாத்மியத்திற்குப் பிறகு நவராத்திரியானது, பண்டிகை மற்றும் கொண்டாட்டமாக மாறியது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

தீமையை நீக்கி நல்லதை நிலைநிறுத்தும் , மகா சக்தியை வணங்கும் ஆன்மீக விழாவை அனைவரும் சிரத்தையுடன் கொண்டாடி மகிழ் வோம்.

– மாலதி சந்திரசேகரன்.

# பார்வைக் கோளாறை தீர்த்துவைக்கும் கண்டன் சாஸ்தா



அஞ்சனம் எழுதிய கண்டன் சாஸ்தா

பல நூற்றாண்டுகளுக்கு முன் பார்வையற்ற ஒரு செல்வந்தன் கடவுள் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார். கண் பார்வை வேண்டி பல தலங்களுக்கு சென்று இறைவனை வழிபட்டவண்ணம் இருந்தார். அவர் கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் அருகிலுள்ள ஆஸ்ராமம் என்ற சிற்றூர் வழியாக வந்து கொண்டிருந்தார். வழியில் யாரோ அழைப்பது போல இருந்தது. அங்கேயே நின்றுவிட்டார். அவர் நின்ற இடம் சாஸ்தா கோயில். இரவு நேரம் என்பதால் அங்கேயே தூங்கிவிட்டார். நடு இரவில் யாரோ அவர் கண்களில் யாரோ ஒருவர் மைதீட்டுவது போல உணர்ந்தார். தூக்கத்தில் இருந்து விழித்தார். அவருக்கு பார்வை கிடைத்திருந்தது. அங்கிருந்த சாஸ்தா கோயிலைக் கண்டார்.

மையிட்டு கண்ணுக்கு ஒளி தந்த சாஸ்தாவுக்கு தன் சொத்துக்களை எழுதி வைத்தார். அன்று முதல் “அஞ்சனம் எழுதிய கண்டன் சாஸ்தா’’ என்ற சிறப்புத்திரு நாமம் சாஸ்தாவுக்கு ஏற்பட்டது. சுருள் சுருளாக தலைமுடியுடன் நடு உச்சியில் சிகைமுடிந்திருக்கும் இவர் கையில் கதாயுதம் தாங்கியடி அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார். பார்வை கோளாறு உடையவர்கள் சிகிச்சை பெறும் முன், இவரைத் தரிசித்தால் நற்பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

அதே போன்று, விழுப்புரத்தில் இருந்து10 கி.மீ., தூரத்திலுள்ள பனையபுரம். “புறவார் பனங்காட்டூர்’’ என்று இவ்வூர் தேவாரப் பாடல்களில் குறிப்பிடப்படுகிறது. இங்குள்ள சிவன் பனங்காட்டீஸ்வரர் எனப்படுகிறார். நேத்ர உத்தாரணேஸ்வரர், திருக்கண்ணமர்ந்த நாயனார் என்றும் அழைக்கப்படுகிறார்.

கண்ணிற்கு புத்துயிர் அளிப்பவர் என்பது இதன் பொருள். ஒரு வேடனால் விரட்டப்பட்ட புறாவிற்கு தன் சதையையே அறுத்துத் தந்த சிபிச்சக்கரவர்த்தியின் கருணையை வியந்த இவ்வூர் ஈசன், அவனுக்கு பிறப்பற்ற நிலை தந்ததாக தல வரலாறு கூறுகிறது. புறாவிற்கு வாழ்வளித்த தலம் என்பதைக் குறிக்கவே, இவ்வூர் ‘புறவார் பனங்காட்டூர்’ என்று பெயர் பெற்றதாக கூறுவர். நவக்கிரக நாயகனான சூரியனும் பனங்காட்டீசரை வழிபாடு செய்ததால், சூரியதோஷம் உள்ளவர்கள் இங்கு வழிபாடு செய்வது சிறப்பு. பார்வைக்கோளாறு உள்ளவர்கள் கண்ணில் அறுவைசிகிச்சை மேற்கொள்வதற்கு முன், இங்கு வந்து இறைவனைவழிபடுகின்றனர். இத்தல அம்பிகைக்கு சத்யாம்பிகை என்பது திருநாமம். இந்த அம்பிகையை வழிபட்டால் உண்மை பேசும் தன்மையும், வாக்கு வன்மையும் வளரும். பொய் சாட்சியால் பாதிக்கப்பட்டவர்கள், இவளிடம் வேண்டிக் கொண்டால் எதிரிகள் தண்டனை பெறுவர் என்று பக்தர்கள் நம்புகிறார்கள்.



பனங்காட்டீசர் திருக்கோயில்

# மகிமைகள் நிறைந்த

# நவராத்திரி

தனம்தரும், கல்வி தரும், ஒருநாளும் தளர்வு அறியா மனம் தரும், நல்லன எல்லாம் தரும் "அபி ராம வல்லியை" வணங்கும் நவராத்திரி விரதம்

சிவபெருமானுக்கு சிவராத் திரி விரதம் இருப் பதை போன்று அம்பாளுக்கு உகந்தது நவராத்திரி விரதம் ஆகும் இந்த நவராத்திரியில் ஒன்பது நாட்களை மூன்று மூன்று நாட்களாக பிரித்து மூன்று தேவிகளுக்கு உரிய பூஜைகள் நடைபெறும்.


முதல் மூன்று நாள்கள் தமோ குண சஞ் சாரியான ஸ்ரீதுர்கா பரமேஸ்வரியை வீரத்தையும், தைரியத்தையும் வேண்டியும், அடுத்த மூன்று நாள்கள் ராஜோ குண சொரூபியான ஸ்ரீ மகாலட்சுமி யை சகல செல்வங்களையும் வேண்டியும், கடைசி மூன்று நாள்கள் சாத்வீகக் குண சொரூபியான ஸ்ரீ சரஸ்வதியை கல்வி, அறிவு, சகல கலை ஞானங்கள் என்பவற்றை வேண்டியும் வணங்குகின்றோம்.

புரட்டாசி மாதத்தில் நவக் கிரகங்களில் நாயக மாக உள்ள சூரியன், கன்னி இராசியில் சஞ்சரிக்கும் காலம் தட்சணாயண காலமாகும். இக்காலம் தேவர்களுக்கு இராக்காலமாகும். உத்தரா யணத்தில் வசந்த நவராத்திரியும்; தட்சணாயன காலத் தில் சாரதா நவராத்திரியும் தேவியைப் பூசிக்கச் சிறந்த காலமாகும். இவை இரண்டிலும் புரட்டாசி மாதத்தில் அனுஷ்டிக்கப்படும் சாரதா நவ ராத்திரி தினங்களிலேயே நாம் எல்லோரும் விரதம் அனுஷ்டித்து பிரார்த்தனை செய்கின்றோம்.

கன்னி ராசிக்கு அதி பதியானவன் புதன். வித்யா காரகன் எனப்படுபவன். கல்வி, புத்தி, தொழில் ஸ்தானம் சரியாக அமைய புதனின் பார்வை முக்கியமானது என்பார். இந்தக் காலத்தில் நவராத்திரி கொண்டாடுவது சாலச்சிறந்தது என்று கருதி எம் முன்னோர் இவ் விரதத்தை அனுஷ்டித்து வந்துள்ளனர்.

பொதுவாக எல்லாப் பூஜைகளும் பகல் நேரத்தில் மேற்கொள்வது வழக்கம். ஆனால் சிவராத்திரி, நவராத்திரி நாட்களில் மட்டுமே மாலையிலும், இரவிலும் பூஜைகள் செய்யப் பெறுகின்றன. நவராத் திரி என்றாலே சக்தியை வழிபடு வது என்பதுதான் அர்த்தம். உலகம் அனைத்தும் சக்தி மயம் என்பதை விளக்குவதே நவராத்திரியின் தத்துவம். பராசக்தியே சர்வ வல்லமை படைத்தவர் ஆவார். அந்த அம்பி கையின் மகிமைகளை 'தேவி பாகவதம்' விரிவாகப் பேசுகிறது.

பிரபஞ்சஉற்பத் திக்கு காரணமான இறைவன் அனேக மூர்த் தங்களின் உருவமாகவும், அருவமாகவும்,








அருவுருவமாகவும் விளங்கிய போதிலும் அவை யனைத்தையும் ஒன்றாக்கித் தாயான ஸ்வரூபத் தில் வழிபடுதல்தான் பெரும் பயனைத் தருமென "பிரபஞ்சவுற்பத்தி" எனும் நூல் கூறுகின்றது.

ஒரு மனிதனின் வளர்ச் சிக்கு உடல் வலிமையும், வாழ்க் கைக்குத் தேவையான செல்வமும் அறிவு வளமும் மிகவும் அவசியம். அதனை வெளிப்படுத்த உடல் வலிமையின் சக்தியாக ஸ்ரீதுர்க்கா தேவியை யும், வாழ்க்கைக்குத் தேவையான செல்வத்தை நல்க வல்ல சக்தியாக ஸ்ரீமஹா லக்ஷ்மியையும் அறிவையும் ஆற்றலையும் தரவல்ல கல்வியின் தேவதையாக ஸ்ரீசரஸ்வதி தேவியையும் நாம் வழிபட்டு அந்த தேவியரின் அருள் பெற்று வலிமை, செல்வம், கல்வி ஆகிய மூன்றினையும் பெறுவதற் காக ஏற்படுத்தப்பட்ட பண்டிகையே நவராத்திரி எனப்படும்.

இந்த அற்புத விரதம் தேவி விரதங்களுட் சிறந்த ஒன் றாகும். ஸ்கந்தபுராணத்தில் இம் மகிமை பேசப்படுகிறது. அமாவாசைத் திதி தொடர்பின்றி அதி காலையில் பிரதமை திதி வியாபித்திருக் கும் நாளே நவராத் திரி ஆரம்ப தினமாகும். மறுநாட்காலை பிரதமை அற்றுப் போய் விடுமாயின் முதல் நாளில் விரதம் கொள்ளல் வேண்டும்.



பிரதமை தினத்தன்று தான் கும்பம் வைத்து பூஜை ஆரம்பிக்க வேண்டும். நவராத்திரி வழி பாடு சக்தி மகிமையை விளக்கும் மனிதனின் முக்கிய தேவைகளான கல்வி, செல்வம், வீரம் (தைரியம்) இம்மூன்றையும் வேண்டி அவற்றுக்கு அதிபதிகளான சரஸ்வதி, லஷ்மி, துர்கை என்று மூன்று சக்தி அம்சங்களையும் வழிபடுதலே இவ்விரத்தின் நோக்மாகும்.

சக்தி வடிவங்களை மூன்றாகப் பிரித்து இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என முப்பெரும் தேவியராக வழி படுவது நம் வழக்கம். மலை மகள், அலை மகள், கலை மகள் என்று துர்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகியோரை வணங்கு கின்றனர். இதில் துர்க்கை வீரத்தை (தைரியத்தை) அளிப்பவளாகவும், திருமகள் செல்வத்தை அருள்பவளாகவும், சரஸ்வதி (அறிவு) கல்வியை அருள்பவளாகவும் விளங்கு கின்றனர். தேவியை வணங்க நவராத்திரியே ஏற்ற காலமாகக் கருதப்படுகிறது.

துர்க்கை:

இவள் நெருப்பின் அழகு. ஆவேசப் பார்வை. வீரத்தின் தெய்வம். சிவபிரியை. இச்சா சக்தி. "கொற்றவை", "காளி" என்றும் குறிப்பிடுவர். வீரர்களின் தொடக்கத்திலும், முடிவிலும் வழிப்படும் தெய்வம். துர்க்கை, மகிஷாசுரன் என்ற அசுரனுடன் ஒன்பது இரவுகள் போராடி ஒன்பதாவது இரவு அவனைச் துவசம் செய்தாள். இவையே "நவராத் திரி" எனப்படும்.

அவனை வதைத்த வெற்றிகொண்ட பத்தாம் நாள் "விஜய தசமி" [விஜயம் மேலான வெற்றி] மகிஷாசுரமர்த் தினியின் திருக்கோலம் ஒரு சில திருக்கோவில்களில் மட்டுமே உள்ளன. மாமல்லபுரத்தில் சிற்ப வடி வில் மிக நேர்த்தியாக உள்ளது. வட இந்தியாவில் துர்க்கா பூஜை என்ற பெயரோடு கொண்டாடுகிறார்கள். நவதுர்க்கை: வன துர்க்கை, சூலினி துர்க்கை, ஜாதவே தோ துர்க்கை, ஜ்வாலா துர்க்கை, சாந்தி துர்க்கை, சபரி துர்க்கை, தீப் துர்க்கை, சூரி துர்க்கை, லவண துர்க்கை இவர்கள் துர்க்கையின்

அம்சங்கள். ஆன்மாவை இறைவன்பால் வழிப்படுத்த திருவருள்தான் துணை நிற்கின்றது. இந்தத் திருவருட் சக்திதான் சித்சக்தி, பராசக்தி, ஆதிபராசக்தி எனப் படுகின்றது. இதில் ஆதிபராசக்தி தான் துர்க் கையாகும்.

நவராத்திரியில் முதல் மூன்று நாளும் இச்சா சக்தியின் தோற்றமான துர்க்கை யின் ஆட்சிக் காலம். இதில் இறைவன் உலகத்தை வாழ்விக்க விரும்புகின்றான். அதனால், மகேஸ்வரி, கௌமாரீ, வராஹி என துர்கா தேவியாகவும்;



அடுத்த மூன்று நாட்களும் கிரியா சக்தியின் தோற்றமான இலக்குமியின் ஆட்சிக்காலம். இதில் இறைவன் ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன போகங்களைக் கொடுக்கும் முறையை அறிகின் றான். அதனால், மஹாலட்சுமி, வைஷ் ணவி, இந்தி ராணி என லட்சுமி தேவியாகவும்;

இறுதி மூன்று நாட்களும் ஞானசக்தியின் தோற்றமான சரஸ்வதியின் ஆட்சிக்காலம். இந்த மூன்று தினங்களிலும் சரஸ்வதி, நரசிம்மீ, சாமுண்டி என சரஸ்வதி தேவியாகவும் சித்தரித்து வணங்கு கிறோம்.

இந்த நாட்களில் நோன்பிருந்து, நைவேத்யங் களைப் படைத்து கலைக்கு ஆதாரமாகத் திகழும் கலைமகளை பாடி, ஆடி பரவசமுடன் வணங்கு வோருக்கு கேட்டவரத்தை சக்தியானவள் கைமேல் நல்குவாள் என்பது ஐதீகம்.

தேவியானவள் அனைத்து உருவத்திலும் எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கிறாள் என்பதைக் குறிக்கும் விதமாகவே அனைத்து உருவ பொம்மை களையும் கொலுவாக வைத்து வணங்கும் கலாச் சாரம் காணப்படுகிறது

நவராத்திரிப் பெருவிழாவின் ஒன்பதாம் நாள் மகாநவமி என்று தொழில்களையும், கல்வியையும், கலைகளையும் போற்றும் விதமாகவும், அதற்கடுத்த நாள் விஜயதசமி என்று வெற்றித் திருநாளாகவும் உலகெங்கும் உள்ள இந்துக்கள் மிகத் தொன்மைக் காலம் தொட்டுக் கொண்டாடி வருகின்றார்கள்.

இத் திருநாளில் (வித்தியாரம்பம் செய்தல்) ஏடு தொடக்குதல், புதிய வியாபார நிலையம் ஆரம்பித்தல், புதிய தொழில் ஸ்தபனங்கள் ஆரம் பித்தல் போன்றன ஆரபிப்பதால் வெற்றியும் புகழும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

மகிஷாசுரன், சண்ட முண்டர்கள், சும்ப நிசும்பர்கள் ஆகிய கொடிய அரக்கர்களை அன்னை பராசக்தி அழித்து வெற்றி கொண்ட திருநாள். தீமையின் உருவான ராவணனை ஸ்ரீராமன் போரில் வென்ற திருநாள். பாண்டவர்கள் தர்மத்தின் வெற்றிக்காக தங்கள் ஆயுதங்களையும், அன்னை துர்க்கையும் வழிபட்ட நன்னாள்.

விஜயதசமி என்பதற்கு மற்றொரு பொருளும் உண்டு. நவராத்திரியின் ஒன்பது நாளும் விரதமிருந்து தூய்மை யான உள்ளத்துடனும், பக்தியுடனும் வழிபட்டவர்கள் இல்லம் தேடி, பத்தாம் நாளான தசமி அன்று ஸ்ரீ அன்னை விஜயம் செய்யும் நாளே 'விஜயதசமி' என்றும் கூறப்படுகிறது. அன்று ஸ்ரீ அன்னையே நம் இல்லம் தேடி வருகிறாள் என்பதே இந்நாளின் மிகப் பெரிய சிறப்பு.

நவராத்திரி நாளான ஒன்பது இரவுகள் தனி சக்தியாக விளங்கும் ஜகன்மாதா, பத்தாம் நாளன்று ஈசுவரனை வணங்கி "சிவசக்தியாக" ஐக்கிய ரூபிணியாக அர்த்தநாரீசுவரராக மாறு கிறாள் என்பதே இந்த பண்டிகையின் புராண வரலாறு. இந்த 9 நாட்களிலும் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி தேவியரை ஒன்பது அவதாரங்களாக அலங்கரித்து, போற்றி பூஜித்து வழிபடுதல் வேண்டும்.

மகா சங்கார (பேரழிவுக்) காலத்தின் முடிவில் இறைவன் உலகத்தைச் உண்டாக்க விரும்புகின்றான் அப்போது இச்சை என்ற சக்தி தோன்றுகின்றது. பின் அதை எவ்வாறு என்று அறிகின்றான். அப் போது ஞானசக்தி தோன்றுகின்றது. பின் கிரியா சக்தியினால் உலகைப் படைக்கின்றான். இக்கருத்தே நவராத்திரி விழாவால் விளக்கப்படுகின்றது. (இச்சை = விருப்பம், ஞானம் =அறிவு, கிரியா = செய்தல், ஆக்கல்)

நவராத்திரியில் கொலு வைப்பது வழக்கம். அமாவாசை அன்றே படிக்கட்டுகள் வைத்து பொம்மை களை வைக்க வேண்டும் என்பதும், விஜய தசமியன்று ஒன்றிரண்டு பொம்மைகளைப் படுக்க வைத்துவிட்டுப் பின்னர் கலைக்க வேண்டும் என்பதும் சாஸ்திரம். தேவியரை வணங்குவதால் எதையும் பெறலாம். ராமர் கூட ராவணன் மீது போர் தொடுக்கும் முன் நவராத் திரி விரதமிருந்து சக்தியிடம் ஆசி பெற்றதாகக் கூறுவதுண்டு.

**- RS ROSHINE**
Chennai

அருள்தரும்
# தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

SPECIAL OFFER

அபிமான உறவுகளே!

மாதம் இருமுறை வெளிவரும்
"அருள்தரும் தெய்வம்" இதழுக்கு இன்றே ஆண்டு சந்தாதாரர் ஆகுங்கள்!"

ஒவ்வொரு இதழிலும் கவர்ச்சிகரமான பரிசுகளை வெல்லுங்கள்!

வருட சந்தா
## ரூ. 399/
மட்டுமே



**1st பரிசு ரூ.1000/**

**2 வது பரிசு ரூ.500/**

**3வது பரிசு ரூ. 250/**

மேலும் 10 நபர்களுக்கு, ஆறுதல் பரிசாக தலா, ரூ. 100 வழங்கப்படும்.

செப்டம்பர் 22ம் தேதி இதழுக்கான

**சிவனின் திரிசூலம்! வெறும் ஆயுதம் அல்ல... பிரபஞ்ச ரகசியம்**

இந்த தலைப்பு இடம்பெற்ற பக்க எண் கூறி பரிசு வெல்லுங்கள்

செப்டம்பர் 7ம் தேதி இதழுக்கான வெற்றியாளர்கள்




S.MANAS




K.GANESAN




SENTHILVELEN

முதல் மூன்று பரிசு வென்றவர்கள்

ஆறுதல் பரிசு வென்றவர்கள்

1.E. Karthikeyan, 2. P. Muthuraman, 3. K.Lakshmanan, 4.D. Deenadayalan, 5. R.Ramesh, 6.K. Suresh, 7. G.Raja, 8. A. Thilakaraj, 9. S. Arumugam, 10T. Jayalakshmi.

போட்டியில் பங்கு பெறுபவர்கள் தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும்

**கூடுதல் தகவல்களைப் பெற: 7092894609**



பகவானின் மந்திரத்தை சொல்லி பிரார்த்திக்க தெரிந்தவர்களுக்கு எப்போதும் எல்லாமே வெற்றிதான். காலையில் விழித்தவுடன் நாராயண னையும் இரவு தூங்கு முன் சிவபெருமானையும் நினைக்க வேண்டும்.

அன்னம் முதலியவற்றை எவர்சில்வர் பாத்திரங்களில் நேரடியாக வைத்து தெய்வங்களுக்கு நிவேதனம் செய்யக்கூடாது. பாத்திரத்தில் இலை வைத்து அதில் உணவை வைத்து நிவேதனம் செய்யலாம்.





திருவாரூர் மாவட்டம் திருமீயச்சூரில் உள்ள லலிதாம்பிகை சமேத மேகநாதர் கோயில் புண்ணியம் செய்திருந்தால் மட்டுமே தரிசிக்கக் கூடிய தலம் என காஞ்சி மகாபெரியவர் கூறியுள்ளார். ‘இத்தலம் மிகவும் புண்ணியமான க்ஷேத்திரம். பூர்வ ஜென்மத்தில் புண்ணியம் செய்தவர்களே இத்தலத்திற்கு வர முடியும். அப்படி வந்து தரிசித்தீர்கள் என்றால், ஸ்ரீலலிதாம்பிகை, ஏழேழு ஜென்மத்துக்கும் உங்களைக் காப்பாள்’ என அருளினாராம்.


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்..

EDITOR & PUBLISHER
R.S.ROSHINE

SUB-EDITORS
Rajan, Mahalakshmi, Mohan Kumar, Rakesh, Tina

EDITORIAL BOARD
Kavi Vennilavan, Balachandar
Nellai Kuralon, Manivannan
Shiva MuthuLakshmanan, Sivakumar
Saravanan, Bhanumathi Nachiyar
Malathi Chandra Sekaran

CIRCULATION
Kannan, Sankara Murthy

DESIGN: SML GRAPHICS Ph:9444228203

PHOTOGRAPHERS: Nagarajan

Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar
Chennai 600081



தொடர்பு கொள்ளவும்
7092894609
www.arultharumdeivam@gmail.com



இதழ்குறித்த தன்னிலை விளக்கம்

இந்த இதழில் வரும் அனைத்து செய்தி, விளம்பரம், புகைப்படத்திற்கு எந்தகாரணம் கொண்டும் எவ்விதத் தனிநபரும் பொறுப்பாகமாட்டார்கள், மற்றபடி சட்டவரன்முறைக்கு ஏற்ப இந்த இதழ் தயாரிக்கப்படுகிறது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு சட்ட வரன்முறையின் வழி பிசகாமல், மற்றவரை இகழ்வது, தாழ்த்துவது, சமுதாயத்தை சீரழிக்கும் செய்திகளை வெளியிடுவது கிடையாது. சேவை மட்டுமே நமது நோக்கம்.

# சிவனின் திரிசூலம்! வெறும் ஆயுதம் அல்ல... பிரபஞ்ச ரகசியம்

மகாதேவன், ஷம்பு, விஸ்வேஸ்வரன், பரமசிவன் என்று பலவாறு அழைக்கப்படும் கடவுளான சிவபெருமான், இந்து புராணங்களில் சக்திவாய்ந்த தெய்வங்களில் ஒருவராகப் போற்றப்படுகிறார்.

சிவபெருமானுடன் தொடர்புடைய மிக முக்கியமான சின்னங்களில் ஒன்று திரிசூலம் ஆகும். இது அவரது தெய்வீக சக்தியையும் பிரபஞ்ச அதிகாரத்தையும் குறிக்கிறது.

திரிசூலத்தின் ஆன்மீக முக்கியத்துவத்தையும் மற்றும் சிவபெருமானுக்கு திரிசூலம் எப்படி கிடைத்தது என்பதை பற்றியும் இப்பதிவில் பார்ப்போம்...



### சிவபெருமானுக்கு திரிசூலத்தை கொடுத்தது யார்?

புராணத்தின் படி, சூரிய கடவுளான சூரிய தேவர், ஆயுதத்தை படைக்கும் கலைஞரான விஸ்வகர்மாவின் மகள் சஞ்சனாவை மணந்தார். தன் கணவர் அதிக வெப்பத்தை வெளிப்படுத்தியதால் சஞ்சனாவால் அதை தாங்கி கொள்ள முடியவில்லை.

அவள் தனக்கு ஏற்படும் பிரச்னையை பற்றி தன் தந்தையிடம்சொன்னாள். விஸ்வகர்மாவும் சூரிய தேவனிடம் தன் மகளின் நலனுக்காக வெப்பத்தை சிறிதளவு குறைக்குமாறு கேட்டுக் கொண்டார். சூரிய தேவரும் அதை ஒப்புக்கொண்டு தனது வெப்பத்தைக் குறைத்தார். இதனால் அவரது சக்தியின் ஒரு பகுதி பூமியில் விழுந்தது. விஸ்வகர்மா இந்த சக்தியைச் சேகரித்து, அதிலிருந்து திரிசூலம் என்கிற ஆயுதத்தை உருவாக்கி, அதை சிவபெருமானுக்கு வழங்கினார். அதில் மூன்று புள்ளிகள் இருந்தன.

### திரிசூலத்தின் முக்கியத்துவம்:

சிவபெருமானின் திரிசூலத்தின் பின்னால் உள்ள குறியீடு வளத்தையும் பன்முகத் தன்மையையும் குறிக்கிறது. மேலும் இது இந்து மதத்தின் ஆழமான ஆன்மீக கருத்துக்களையும் பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு அம்சத்திற்கும் விரிவான விளக்கங்கள் இருக்கின்றன.

திரிசூலத்தின் மூன்று முனைகள் பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் உள்ளிட்ட மும்மூர்த்திகளைக் குறிக்கின்றன. ஒவ்வொரு முனையும் மும்மூர்த்திகளின் அம்சங்களை குறிக்கின்றன:

**பிரம்மா:** பிரபஞ்சத்தின் படைப்பாளர், படைப்பைக் குறிக்கிறது.

**விஷ்ணு:** பிரபஞ்சத்தைப் பாதுகாப்பவர், பாதுகாப்பைக் குறிக்கிறது.

**சிவன்:** பிரபஞ்சத்தை அழிப்பவர், அழிவைக் குறிக்கிறது.

இந்த மூன்று அம்சங்களும் ஒன்றாக இருந்து பிரபஞ்சத்தின் சுழற்சி தன்மையைக் குறிக்கின்றன.

சிவபெருமான் பெரும்பாலும் காலத்துடன்

தொடர்புடையவர் மற்றும் கடந்த காலம், நிகழ் காலம் மற்றும் எதிர்காலத்தின் எஜமானராகக் கருதப்படுகிறார். திரிசூலம் இந்த அம்சத்தைக் குறிக்கிறது. இது சிவனின் காலத்தின் மீதான கட்டுப்பாட்டையும் வாழ்க்கை மற்றும் மரணத்தின் சுழற்சி தன்மையையும் குறிக்கிறது.

இந்து தத்துவத்தில், மனித குணங்கள் மூன்று குணங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன சத்வா (தூய்மை, அறிவு), ரஜஸ் (செயல்பாடு, ஆர்வம்), மற்றும் தமஸ் (மந்தநிலை, இருள்). திரிசூலம் இந்த மூன்று குணங்களையும் குறிக்கிறது.

சத்வா: முதல் முனை தூய்மை, நல்லிணக்கம் மற்றும் ஞானத்தை குறிக்கிறது.

ரஜஸ்: இரண்டாவது முனை செயல்பாடு, ஆசை மற்றும் ஆர்வத்தை குறிக்கிறது.

தமஸ்: மூன்றாவது முனை மந்தநிலை, அறியாமை மற்றும் இருளைக் குறிக்கிறது.

## சிவபெருமான் ஏன் திரிசூலம் ஏந்தி இருக்கிறார்?

பிரபஞ்சத்தின் மீதான தனது தெய்வீக சக்தியையும் அதிகாரத்தையும் குறிக்க சிவபெருமான் திரிசூலத்தை எப்போதும் ஏந்தி இருக்கிறார். திரிசூலத்தால் தீமையை அழிப்பவராகவும், பிரபஞ்சத்தைப் பாதுகாப்பவராகவும் அவர் திகழ்கிறார். பிரபஞ்சத்தின் சமநிலையையும் நல்லிணக்கத்தை யும் பராமரிக்கும் திறனையும் இது எடுத்துக் காட்டுகிறது. இது உலகப் பற்றுகளைத் துறந்து, அகங்காரத்தை வெல்லக் கூடிய போதனைகளையும் குறிக்கிறது. திரிசூலம் ஒரு தற்காப்பு ஆயுதமாக செயல்படுகிறது. எதிர்மறை சக்திகளைத் தடுத்து, பக்தர்களைப் பாதுகாக்கிறது.



சிவபெருமான் மற்றும் அவரது திரிசூலம் பற்றிய புராணக்கதைகள்:

சிவபெருமானுடனும் திரிசூலத்துடனும் தொடர் புடைய கதைகள் இந்து புராணங்களில் ஆழமாக வேரூன்றியுள்ளன.

## திரிபுராவின் அழிவு:

இந்து புராணங்களின்படி, திரிபுராசுரன் என்ற அரக்கன் மகத்தான சக்தியைப் பெற்று உலகையே பயமுறுத்திக் கொண்டிருந்தான். தங்கம், வெள்ளி மற்றும் இரும்பினால் ஆன மூன்று பறக்கும் நகரங்கள் (திரிபுரங்கள்) அவனிடம் இருந்தன. அவை ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை இணையும் போது யாரும் அவனை வெல்ல முடி யாத சக்தியை பெற்றான். அந்த சக்தியானது யாராலும் அவனை அழிக்க முடியாதவனாக மாற்றியது.

அவனது கொடுங்கோன்மையைத் தடுக்க, பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவபெருமான் மூவருமாக இணைந்து செயல்பட ஆலோசித்தனர். சிவபெருமான், தனது திரிசூலத்தால், மூன்று நகரங்களையும் ஒரே நேரத்தில் அழித்து, அதன் மூலம் திரிபுரசுரனை தோற்கடித்து பிரபஞ்சத்தில் சமநிலையை மீட்டெடுத்தார். இந்தக் கதை நீதியின் வெற்றியையும் தீய சக்திகளின் இறுதி அழிவையும் குறிக்கிறது

## அந்தகனின் தோல்வி:

மற்றொரு புராணக் கதையானது, அந்தகன் என்ற அரக்கனை பற்றி கூறுகிறது, அவனிடம் மாபெரும் சக்தி இருந்தது. அவன் போரில் அடிபட்டு இறந்தால் கூட அந்த இரத்தத்திலிருந்து மீண்டும் மீண்டும் பிறக்கும் சக்தியைப் பெற்றிருந்தான். இதனால் அவனைப் போரில் யாராலும் வெல்ல முடியவில்லை. அவன் தன்னுடைய ஆணவத்தால் சிவபெருமானுக்கே சவால் விட்டான்.

அதைத் தொடர்ந்து நடந்த போரில், சிவபெருமான் தனது திரிசூலத்தைப் பயன்படுத்தி அந்தகனைத் துளைத்து, அதிக இரத்தப்போக்கை ஏற்படுத்தினார். அந்தகன் மீண்டும் பிறப்பதைத் தடுக்க, சிவபெருமான் அவனது இரத்த ஓட்டத்தை ஒரு அரச மரத்திற்கு திசை திருப்பினார்.

இதன் விளைவாக, அந்தகனால் மீண்டும் பிறக்கும் சக்தியைப் பெற முடியவில்லை. சிவபெருமான் வெற்றி பெற்றார். இந்தக் கதை இருள் மற்றும் அறியாமையின் மீது தெய்வீக சக்திகளின் வெற்றியைக் குறிக்கிறது. இந்தக் கதைகள் சிவபெருமானின் திரிசூலத்தின் முக்கியத்துவத்தையும் மற்றும் அவருடைய தெய்வீக சக்தியையும் எடுத்துக்காட்டுகின்றன. சிவபெருமான் பிரபஞ்சத்தின் பாதுகாவலராகவும் தீய சக்திகளை அழிப்பவராகவும் திகழ்கிறார்.

# முடிந்ததை செய்வது கூட உயர்ந்த கைங்கர்யம்தான்

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று எந்த செயலையும் நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக்கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், 'நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய கைங்கர்யம் பண்ணமுடியும்?' என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது.

ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி 'நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?' என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetimeல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரிசாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலியில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், 'என்னால் இதற்குமேல் பண்ணச் சக்தி இல்லையே!' என்று மனஸார வருத்தப்பட்டு நீளமாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகமசில்பவ்யாஸ பாரத கிராம கலாவித்வத்ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடு கூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.



முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம்முடைய மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் ஸமூகத்தில் ஸௌஜன்யம் உண்டாகும்.

எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத்தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். 'பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்' என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வராநுக்ரஹமும் வரும். எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

– தெய்வத்தின் குரல்

# செய்க தவம்!

பக்தன் என்பவன் யார்? எது ஒன்றின் மீதும் அதீதப் பற்றுக் கொண்டவன் எவனோ, அவனே பக்தன். கலை மீது, கவிதை மீது, மங்கை மீது, மதுவின் மீது, உணவின் மீது, இறைவன் மீது என பற்று எதன் மீதும் இருக்கலாம். ஆனால் இறைவன் மீது பற்றுக் கொண்டவனே பொதுவாக பக்தன் என்ற பதத்துக்கு உரிமை உள்ளவன். அத்தகைய இறை பக்தனை வேதம் நான்கு வகையினராகப் பிரித்துக் காட்டுகிறது. அந்த நான்கு பேர்:



1.ஆர்த்தன்

2.ஜிக்ஞாசு

3.அர்த்தார்த்தி

4.ஞானி

துன்பத்திலிருந்து இறைவன் தன்னை ரட்சிக்க வேண்டுபவன் ஆர்த்தன்.

உண்மைத் தத்துவத்தை அறிய வேண்டுமென்று ஆவலுடன் ஈஸ்வரனை ஆச்ரயிப்பவன் ஜிக்ஞாசு.

சுகபோகங்களுக்காக, செல்வங்களுக்காக, பரமேஸ்வரனை வேண்டுபவன் அர்த்தார்த்தி.

மெய்ப்பொருளை உணர்ந்து எல்லாம் ஆத்ம மயமாகக் காண்பவன் ஞானி.

இந்த நால்வரில் ஞானியின் நிலையே உயர்ந்தது. அத்தகைய ஞானியே "முமுட்க்ஷு" எனவும் அறியப்படுகிறான். முமுட்க்ஷு என்பவர் ஞானத்தின் பாதையைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு அனைத்தை யும் துறந்தவர். நான் சொர்க்கத்திற்காக உன்னை வணங்கினால் எனக்கு அந்த சொர்க்கமே வேண்டாம். நரகத்திற்கு பயந்து உன்னிடம் வந்தால் என்னை அங்கேயே கிடத்திவிடு. எனக்கு சரணா கதியான இறையனுபவமே பிரதானம் என்பவர் ஞானி.



அத்தகைய முமுட்க்ஷு வின் பாதையை "க்ஷுரஸ்ய தாரா" என்று உபநிடதம் வர்ணிக்கிறது. அதாவது சவரக் கத்தியின் கூர் முனையின் மீது பயணம் செய்வது போன்றது அவர் இயற்றும் தவவாழ்க்கை என்பது அதன் பொருள். அதற்கு ஈவு இரக்கம் கிடையாது என்ற பொருளும் உண்டு. பழங்காலத்தில் அறுவை சிகிச்சையை சவரக் கத்தி கொண்டுதான் செய்தார்கள்.

அத்தகைய கூர்மை கொண்டவர் தான் ஞானி என்ற முமுட்க்ஷு. அகத்திய மாமுனிவர் முதல் வேதத்திரி மகரிஷி வரை, நாயன்மார்கள் முதல் பரமஹம்ஸர் வரை என்று மெய்ஞான சாகரத்தின் மறுகரையைக் கண்ட பேரருளாளர்களான ஞானிகள் பலர் வாழ்ந்த பெருமை கொண்டது நமது பாரத தேசம்.

மெய்ஞானத்தின் மேல் எல்லையைத் தொடுகின்ற அத்தகைய முனைப்பு எல்லோருக்கும் சாத்தியப் படுவதில்லை. சாமானிய பக்தன் இறை சந்நிதியின் கதவுகளைத் தட்டிக் கொண்டு நிற்பதிலேயே லயித்து விடுகிறான். ஆயினும் அவனுக்கும் இறைவன் அருள் செய்கிறான்.

"திறந்து கொடு, திறந்து கொடு என்று எத்தனை முறைதான் தட்டுவீர்கள் திறந்து கிடக்கும் கதவை " என்கிறார் ஒரு ஸூஃபி ஞானி.

எனவே பரமனைத் துதிப்பதில், பக்தி செய்வதில் தினம் ஒரு படி மேலேறுவோம். இறை பக்தியில் மேற்சொன்ன ஞானிகளைப் போல் வானத்து நிலவாக நாம் ஜொலிக்க முடியாவிட்டாலும், நடுவீட்டில் ஒளிரும் குத்து விளக்காகவாவது பிரகாசிப்போமாக.

செய்க தவம், செய்க தவம்.

இறையருளைப் பாடுவோம்! நிறை வாழ்வை நாடுவோம்!!

– கணபதி

பாளையங்கோட்டை



# 12 ராசியும் ஒவ்வொன்றும் பெற்றுள்ள நற்பண்புகளும்

ஒவ்வொரு ராசியும் 9 விதமான நற்பண்புகளைக் கொண்டுள்ளது. இந்த நற்பண்புகளை அந்த அந்த ராசிக்குரியவரிடமும் இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

1. மேஷம், 2. ரிஷபம், 3. மிதுனம், 4.கடகம், 5. சிம்மம், 6. கன்னி, 7. துலாம், 8.விருச்சிகம், 9. தனுசு, 10. மகரம், 11. கும்பம், 12.மீனம் ஆகிய ஒவ்வொரு இராசி மண்டலமும் தனித்துவம் வாய்ந்தவை. அதன் படி ஒவ்வொரு ராசியும் பெற்றுள்ள சிறப்பம்சங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது.

**மேஷம்** 1. வைராக்கியம் (Assertiveness) 2. தேசநலன் (Citizenship) 3. நிறைவேற்றுதல் (Chivalry) 4. துணிச்சல் (Courage) 5. கீழ்படிதல் (Obedience) 6. வெளிப்படையாக (Openness) 7. ஒழுங்குமுறை (Order) 8. ஏற்றுக்கொள்ளுதல் (Acceptance) 9. ஆன்மிகம் (Spirituality)

மேஷராசி ஜீரண மண்டலத்தின் ஆதாரமாகும்

**ரிஷபம்** : 1. கருணை (Mercy) 2. இரக்கம் (Compassion) 3. காரணம் அறிதல் (Consideration) 4. அக்கறையுடன் (Mindfulness) 5. பெருந்தன்மை (Endurance) 6. பண்புடைமை (Piety) 7. அஹிம்சை (Non violence) 8. துணையாக (Subsidiarity) 9. சகிப்புத்தன்மை (Tolerance)

ரிஷபராசி மண்டலமானது சிறுநீரக மண்டலத்தின் ஆதாரமாகும்

**மிதுனம்** : 1. ஆர்வம் (Curiosity) 2. வளைந்து கொடுத்தல் (Flexibility) 3. நகைச்சுவை (Humor) 4. படைப்பிக்கும் கலை (Inventiveness) 5. வழிமுறை (Logic) 6. எழுத்து கற்க பிரியம் (Philomathy) 7. காரணம் (Reason) 8. ï‰Fóñ£è (Tactfulness) 9. ¹Kந்து கொள்ளுதல் (Understanding)

மிதுனராசி மண்டலமானது நரம்பு மண்டலத்தின் ஆதாரமாகும்.

**கடகம்**: 1. பிறர் நலம் பேணுதல் (Altruism) 2. நன்மை செய்ய விரும்புதல் (Benevolence) 3. அறம் (Charity) 4. உதவுகின்ற (Helpfulness) 5. தயாராக இருப்பது (Readiness) 6. ஞாபகம் வைத்தல் (Remembrance) 7. தொண்டு செய்தல் (Service) 8. ஞாபகசக்தி (Tenacity) 9. மன்னித்தல் (Forgiveness)

கடகராசி மண்டலமானது ஐம்புலன் மண்டலத்தின் ஆதாரமாகும்.

**சிம்மம்** : 1. வாக்குறுதி (Commitment) 2. ஒத்துழைப்பு (Cooperativeness) 3. சுதந்திரம் (திக்ஷீமீமீபீஷீனீ) 4. ஒருங்கிணைத்தல் (Integrity) 5. பொறுப்பு (Responsibility) 6. ஒற்றுமை (Unity) 7. தயாள குணம் (Generosity) 8. இனிமை (Kindness) 9. பகிர்ந்து கொள்ளுதல் (Sharing)

சிம்மராசி மண்டலமானது தசை மண்டலத்தின் ஆதாரமாகும்.



**கன்னி** : 1. சுத்தமாயிருத்தல் (Cleanliness) 2. அருள் (Charisma) 3. தனித்திருத்தல் (Detachment) 4. சுதந்திரமான நிலை (Independent) 5. தனிநபர் உரிமை (Individualism) 6. தூய்மை (Purity) 7. உண்மையாக (Sincerity) 8. ஸ்திரத்தன்மை (Stability) 9. நல்ஒழுக்கம் (Virtue ethics)

கன்னிராசி மண்டலமானது தோல் மண்டலத்தின் ஆதாரமாகும்.

**துலாம்** : 1. சமநிலை காத்தல் (Balance) 2. பாரபட்சமின்மை (Candor) 3. மனஉணர்வு (Conscientiousness) 4. உள்ளத்தின் சமநிலை (Equanimity) 5. நியாயம் (Fairness) 6. நடுநிலையாக (Impartiality) 7. நீதி (Justice) 8. நன்னெறி (Morality) 9. நேர்மை (Honesty)

துலாராசி மண்டலமானது சுவாச மண்டலத்தின் ஆதாரமாகும்.

**விருச்சிகம்** : 1. கவனமாக இருத்தல்(Attention) 2. விழிப்புணர்வுடன் இருத்தல் (Awareness) 3.எச்சரிக்கையாக இருத்தல் (Cautiousness) 4.சீரிய யோசனை (Consideration) 5. பகுத்தறிதல் (Discernment) 6. உள் உணர்வு (Intuition) 7. சிந்தனைமிகுந்த (Thoughtfulness) 8. கண்காணிப்பு (Vigilence) 9. அறிவுநுட்பம் (Wisdom)

விருச்சகராசி மண்டலமானது நிணநீர் மண்டலத்தின் ஆதாரமாகும்.

**தனுசு**: 1. லட்சியம் (Ambition) 2. திடமான நோக்கம் (Determination) 3. உழைப்பை நேசிப்பது Diligence) 4. நம்பிக்கையுடன் (Faithfulness) 5. விடாமுயற்சி (Persistence) 6. சாத்தியமாகின்ற (Potential)7. நம்பிக்கைக்குரிய (Trustworthiness) 8. உறுதி (Confidence) 9. ஊக்கத்துடன் முயற்சி (Perseverance)

தனுசு ராசி மண்டலமானது எலும்பு மண்டலத்தின் ஆதாரமாகும்.

**மகரம்**: 1. கண்ணியம் (Diginity) 2. சாந்த குணம் (Gentleness) 3. அடக்கம் (Moderation) 4. அமைதி (Peacefulness) 5. சாதுவான (Meekness) 6. மீளும் தன்மை (Resilience) 7. மௌனம் (Silence) 8. பொறுமை (Patience) 9. செழுமை (Wealth)

மகரராசி மண்டலமானது நாளமுள்ள சுரப்பி மண்டலத்தின் ஆதாரமாகும்.

**கும்பம்** : 1. சுய அதிகாரம் (Autonomy) 2. திருப்தி (Contentment) 3. மரியாதை (Honor) 4. மதிப்புமிக்க (Respectfulness) 5. கட்டுப்படுத்துதல் (Restraint) 6. பொது கட்டுப்பாடு (Solidarity) 7. புலனடக்கம் (Chasity) 8. தற்சார்பு (Self Reliance) 9. சுயமரியாதை (Self-Respect)

கும்பராசி மண்டலமானது நாளமில்லா சுரப்பி மண்டலத்தின் ஆதாரமாகும்.


**மீனம்** : 1. உருவாக்கும் கலை (Creativity) 2. சார்ந்திருத்தல் (Dependability) 3. முன்னறிவு (Foresight) 4. நற்குணம் (Goodness) 5. சந்தோஷம் (Happiness) 6. ஞானம் (Knowledge) 7. நேர்மறை சிந்தனை (Optimism) 8. முன்யோசனை (Prudence) 9. விருந்தோம்பல் (Hospitality)

மீனராசி மண்டலமானது இரத்த ஓட்ட மண்டலத்தின் ஆதாரமாகும்.

# எளிமையான பரிகாரங்கள்!!

❍ மிகக்கொடிய கடன் தொல்லைகளுக்கு ஸ்ரீ யோக நரசிம்மரை வழிபடுவதும் மற்ற கடன் தொல்லைகளுக்கு ஸ்ரீ லட்சுமி நரசிம்மரை வழிபடுவதும் மிக சிறந்த பரிகாரமாகும்!!!

❍ ஹோமங்களில் சிறப்பு வாய்ந்தது மிருத் யுஞ்ஜய ஹோமம். சிவாலயங்களில் ஈசான்ய பகுதியில் வீற்றிருக்கும் காலபைரவரை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 முதல் 6.00. மணி ராகு காலத்தில் வழிப்பட்டு மிருத்யுஞ்ஜ ஹோமம் நடத்துவதால் பெறும் பயனைப் பெற்று நோய்,மரண பயம் நீங்கி நீண்ட ஆயுள் பெறலாம்!!



❍ குடும்பத்தில் தாங்க முடியாத கஷ்டங்கள் ஏற்படும் போதும் உடனடியாக அருகிலுள்ள ஆலயங்களில் தீபம் ஏற்றி வைப்பது அந்த விநாடியே கஷ்டங்கள் குறைவதற்கு மகரிஷிகள் கூறிய ரகசிய பரிகாரமாகும்!!!

❍ வியாழக்கிழமை தட்சிணா மூர்த்திக்கு மாப்பொடியால் அபிசேகம் செய்தால் செல்வ வளம் பெருகும்.கடன் தொல்லைகள் அகலும்!!

❍ வெள்ளெருக்கு விநாயகரை விட்டு அறைகளில் உயரத்தில் வைக்க வீட்டில் ஏதும் பூத கண சேஷ்டைகள் இருந்தால் விலகி விடும்!!

❍ சக்கரத்தாழ்வார் சன்னதியில் நெய் தீபம் ஏற்றி தினமும் 12 முறை சுற்றி 48 நாட்கள் வழிபட தொழில்,வழக்கு சாதகமாகும்.21 செவ்வாய்க்கிழமை நெய்தீபம் ஏற்றிவர பில்லி சூன்யம் விலகும்!!

❍ இரண்டு சர்ப்பங்கள் இணைந்தது போல உள்ள நாகராஜ சிலைக்கு வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி முதல் 12.00 மணிக்கு ராகு காலத்தில் அபிசேகம் செய்து மஞ்சள் குங்குமம் வைத்து செவ்வரளி பூக்கள் சாற்றி நெய்தீபம் ஏற்றி தம்பதியினர் பெயருக்கு அர்ச்சனை செய்தால் தம்பதியினர் ஒற்றுமையுடன் அன்னியோன்யமாக வாழ்வார்கள்!!

❍ பித்ரு தோசம் உள்ளவர்கள் தொடர்ந்து அமாவாசைக்காலங்களில் நெய்தீபம் ஏற்றி பெருமாளை சேவிக்க பித்ரு தோசம் விலகும்!!

❍ வெள்ளிக்கிழமை நவக்கிரக சுக்கிரனுக்கு அகல் விளக்கில் கற்கண்டு போட்டு நெய் தீபம் எற்றி வழிபட கணவன் மனைவி கருத்து வேறுபாடு நீங்கும்!!

❍ திங்கள் கிழமை காலை 6.00 மணிக்குமேல் 7.00 மணிக்குள் நந்திக்கு ஜோடி அகல் விளக்கில் நெய் தீபம் ஏற்றி வர. குடும்பத்தில் அமைதி பிறக்கும்!!



அம்பிகையின் துதி நூல்களில் முதலிடம் வகிப்பது ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம். இதை உபதேசித்தவர் ஹயக்ரீவர். உபதேசம் பெற்றவர் அகஸ்திய முனிவர். உபதேசம் செய்தவரும் சாதாராணமானவர் அல்ல, உபதேசம் பெற்றவரும் சாதாரணமானவர் அல்ல.

பிரம்மதேவரிடம் இருந்து அசுரன் ஒருவன் வேதங்களைக் கவர்ந்துகொண்டு போனபோது, மகாவிஷ்ணு ஹயக்ரீவராக (குதிரை முகம் கொண்டவராக) வந்து, அசுரனைக் கொன்று, வேதங்களை மீட்டார். ஞானத்தின் வடிவமே ஹயக்ரீவர். அப்படிப்பட்டவர், லலிதா ஸஹஸ்ர நாமத்தை உபதேசம் செய்திருக்கிறார். உப தேசம் பெற்ற அகஸ்தியரின் பெருமையோ, அளவில் அடங்காது, அதில் ஒன்றை மட்டும் இங்கே பார்க்கலாம்.

சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடந்தபோது மகாவிஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் அங்கு கூடினார்கள். அதன் காரணமாக, வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்தது. அப்போது சிவபெருமான் அகஸ்தியரைத் தென்திசைக்கு அனுப்ப, பூமி சம நிலை பெற்றது. இந்தக் கதை அனைவருக்குமே தெரிந்ததுதான். ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதியான சிவபெருமான் முதல் தேவர்கள் வரை அனைவரும் ஒரு பக்கம் இருக்க.... அகஸ்தியர் மட்டும் தென்திசை



# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

## அற்புதமான வரலாறும் சிறப்புகளும்

போனார். அதனால் பூமி சமநிலை ஆனது என்றால் என்ன பொருள்?

அந்தப் பக்கம் இருந்த அவ்வளவு பேருக்கும் சமமானவர் அகஸ்தியர் என்பது தானே இதன் பொருள்? அதாவது, அனைத்து தெய்வங்களுக்கும் சமமானவர் அகஸ்தியர். அப்படிப்பட்ட மகா புருஷர் லலிதா ஸஹஸ்ரநாமத்தை உபதேசம் பெற்றி ருக்கிறார்.

ஞானத்தின் வடிவமான ஹயக்ரீவர் உப தேசிக்க, அதை அனைத்து தெய்வங்க ளுக்கும் சமமான அகஸ்தியர் கேட்டிருக்கிறார் என்றால், ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் எந்த அளவுக்கு உயர்ந்ததாக மேன்மையானதாக இருக்க வேண்டும்.



பதினெட்டு புராணங்களில் ஒன்றாகிய பிரம்மாண்ட புராணத்தில், லலிதோபாக்யானம் என்ற பகுதியில் லலிதா தேவியின் திரு அவ தாரமும், சரிதமும் கூறப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாக, அன்னை பராசக்தியின் ஆயிரம் திருநாமங்களைக் கூறும் லலிதா ஸஹஸ்ரநாமம் என்னும் மகோன்னதமான இந்த ஸ்தோத்திரம் உள்ளது. ஹயக்ரீவர் என்ற மகரிஷி (விஷ்ணு அவதாரமாகக் கூறப்படுவதும் உண்டு) அகஸ்திய மகரிஷிக்கு உபதேசம் செய்வதாக அமைக்கப்பட்டுள்ளது.

அகஸ்தியரும், அவரது மனைவி லோபாமுத்திரையும் சக்தி வழி பாட்டு நெறிகளை உருவாக்கிய குருமார் களில் முதன்மையாக வைத்துப் போற் றப்படுபவர்கள் (லோபாமுத்ரார்ச்சிதா லோபா முத்திரையால் அர்ச்சிக்கப்பட்டவள் என்றே ஒரு நாமம் லலிதா ஸஹஸ்ரநாமத்தில் உண்டு). தேவி யின் கட்டளைக்கிணங்க வாசினி முதலான வாக் தேவதைகளே பிரத்யட்சமாகி இந்த தெய்வீக ஸ்தோத்திரத்தைச் செய்ததாகவும் புராணக் குறிப்பு உண்டு.

ஸஹஸ்ரநாம நூல்களிலேயே தனித் துவமும், தனிச்சிறப்பும் மிக்கதாக லலிதா ஸஹஸ்ரநாமம் உள்ளது. அபாரமான கவித்துவமும், சொல்லழகும், ஓசை நயமும் கொண்டது. சாக்த நெறியின் தத்துவங்கள் பெரும் வீச்சோடும், காம்பீர் யத்தோடும் இதில் முன் வைக்கப்படுகின்றன. வேதாந்த தத்துவ உண்மைகளை மந்திரம், யந்திரம், தந்திரம் ஆகிய நுட்பமான குறியீடுகளாக வெளிப்படுத்துவது சாக்த உபாசனை. பிரம்ம வித்தை என்று வேதாந்தம் கூறும் உண்மைகளையே சக்தி உபாசகர்கள் ஸ்ரீவித்யை என்று அழைக்கிறார்கள். இந்தக் குறியீடுகளை சூனியத்தில் மிதக்க விடாமல் அவற்றுக்கு அழகும்,முழுமையும் அளிக்கும் விதமாகவும் லலிதா ஸஹஸ்ரநாமம் அமைந்துள்ளது.

லலிதா ஸஹஸ்ரநாமத்திற்கு ஒரு குறிப்பிட்ட வடிவமும், அமைப்பும், நடையும் உள்ளது. இதில் திருநாமங்கள் கோர்க்கப் பட்டிருக்கும் வரிசையே ஒரு குறிப்பிட்ட சித்தாந்தக் கருத் தை விளக்குவதாக உள்ளது. அம்பாளின் ஆயிரத் தெட்டு நாமங்களும்,

1. ஸ்ரீமாதாவின் அவதாரம்,
2. கேசாதி பாத வர்ணனை (ஸ்தூல ரூபம்),
3. பண்டாசுர வதம்,

4. மந்த்ர வர்ணனை (சூட்சும ரூபம்),

5. குண்டலினீ ரூபம்,

6. பக்த அனுக்ரஹம்,

7. நிர்க்குண உபாசனை,

8. சகுண உபாசனை,

9. பஞ்சப்ரஹ்ம ரூபம்,

10.க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞ ரூபம்,

11.பீடங்களும், அங்க தேவதைகளும்,

12. யோகினீ தியானம்,

13. விபூதி விஸ்தாரமும், மார்க்க பேதங்களின் சமரசமும்,

14. சிவசக்தி ஐக்கியம்,

ஆகிய வரிசையில் பேசுபொருள்களைக் குறித்து அமைந்திருப்பதாக உள்ளது.



தேவர்களின் வேண்டுதலுக்கு இணங்கி அக்னிகுண்டத்தில் அவதரித்தவள் லலிதா தேவி. நான்கு கைகளில் பாசம், அங்குசம், கரும்புவில், மலர்க்கணைகள் ஆகியவற்றை ஏந்தியவள். இந்தப் புராண விளக்கம் தியானத்திற்குரிய தத்துவக் குறியீடாக லலிதா ஸஹஸ்ரநாமத்தின் தொடக்கத்திலேயே வந்து விடுகிறது.

சிதக்னுனிகுண்டஙு ஸம்பூதா அறிவாகிய அக்னி குண்டத்தில் தோன்றியவள்,

ராகஙுஸ்வரூப பாசா’ட்யா ஆசை வடிவான பாசக்கயிற்றை ஏந்தியவள்,

க்ரோதா கார அங்குசோ’ஜ்வலா தீமையைப் பொசுக்கும் கோப வடிவான அங்கு சத்தை கையில் ஏந்தி ஒளிர்பவள்,

மனோரூப இக்ஷு கோதஙுண்டாஙு மனமாகிய கரும்புவில்லை உடையவள்,

பஞ்சதன்மாத்ர ஸாயகா ஐந்து புலன்களாலும் உணரப்படும் ஒலி, தொடுகை, உருவம், ரசம், மணம் என்ற ஐந்து தன்மாத்திரைகளையும், ஐந்து மலர்க்கணைகளாகக் கொண்டவள். பாசக் கயிற்றால் உயிர்களை ஆசையில் பிணிப்பவளும், பின் தனது அங்குசத்தால் அதனை வெட்டி எறிபவளும் அவளே. மனமாகிய வில்லில் ஐம்புலன்களாகிய மலர்க்கணைகளைப் பொருத்தி தேவி பிரபஞ்ச விளையாட்டு விளையாடுகிறாள்!.

தத்துவ அளவில் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் தூய அத்வைத நிலையில் இருந்தே பாடப்பட்டது என்பது இந்த நாமங்களின் பெருங்கடலின் ஒரு துளியை அள்ளிப் பருகினாலே தெரிய வரும் விஷயம். நிர்த்ஙுவைதா த்வைதம் எனப்படும் இருமை நோக்கை நீக்குபவள், த்ஙுவைத வர்ஜிதா இயல்பாகவே இருமை நிலை இல்லாதவள், ஸாமரஸ்ய பராயணா சமரசத்தில் நிலை பெற்றவள் என்பனவும் அன்னையின் திருநாமங்களே.

இந்த அடிப்படையான சமரச பாவத்துடனேயே ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத் தை நாம் பாரா யணம் செய்யவும், தியானம் செய்யவும் வேண்டும். அப்படி தியானம் செய்பவர்களுக்கு நிர்க் குணமும் சகுணமும், ஞானமும் பக்தியும் கர்மமும், வாமாசாரமும் தட்சிணாசாரமும், யோகமும் போகமும், கோரமும் சாந்தமும், இல்லறமும் துறவறமும் எல்லாம் அன்னையின் உள்ளத் துக்கு உகந்ததாகவும், எல்லாமாகி இலங்கும் அவளை அடைவதற்கான மார்க் கங்களாகவே திகழும்.

தத்துவங்களே அன்னையின் இரு கைகளாகவும் (தத்வாஸனா), காற்சிலம்பின் மணி களாகவும், கையில் ஏந்தி விளையாடும் பூக்களாகவும், மகா காளிக் கோலத் தில் அவள் அணியும் மண்டையோட்டு மாலைகளாகவும் ஆகிவிடுகின்றன!

அதுவே லலிதா ஸஹஸ்ரநாமம் அளிக்கும் பரவச அனுபவம். இந்த துதியைப் பொருள் உணர்ந்து படிக்கும் போதும், தியானிக்கும் போதும் தர்க்க மனத்தின் எல்லைகளுக்கு அப்பால் அது சுழன்றடித்துச் செல்கிறது.

பக்தியுடன் இதைப் பாராயணம் செய்யும் ஒவ் வொரு முறையும் ஏதோவொரு நாமம் நம் மனதில் ரீங்கரித்து மொழியின் சாத்தியங்களை மீறி ஒரு ஆன்மிகப் பெருவெளிக்குள் நம்மை அழைத்துச் செல்கிறது.

இவ்வளவு சிறப்புகள் பெற்று தன்னுள்
அனைத்து தெய்வ சக்திகளையும் அடக்கியுள்ள
லலிதா ஸஹஸ்ர நாமத்தை நாமும் கூறுவதால்
இக, பர சுகத்தை எளிதாக அடையலாம்.

– கீதாராஜன்,
சென்னை.

# புரட்டாசி எதற்காக சைவமாதமானது?

புரட்டாசி மாதத்தை சைவ மாதமாக முன்னோர்கள் மாற்றியதற்கான அற்புதக் காரணங்கள் உள்ளன.

புரட்டாசி மாதம் வெயிலும் காற்றும் குறைந்து மழை ஆரம்பிக்கும் மாதம்.

ஆனால் பூமி குளிர மழை பெய்யாது. பல மாதம் வெயிலால் சூடாகியிருந்த பூமி மழைநீரை ஈர்த்து வெப்பத்தை குறைக்க ஆரம்பிக்கும்.


அதனால்தான் இந்த மாதத்தை சூட்டை கிளப்பிவிடும் மாதமாக புரட்டாசியை கூறுவார்கள்.

இது வெயில் கால வெப்பத்தை காட்டிலும் கெடுதல் தரக்கூடியது. இந்த நேரத்தில் அசைவம் சாப்பிடுவது உடல் சூட்டை அதிகப்படுத்தி உடல் நலத்தை குறைக்கும். வயிறு சம்பந்தமான பிரச்சனையை ஏற்படுத்தும். அது மட்டுமன்றி சரிவர பெய்யாத மழை திடீர் வெப்ப மாறுதல் நோய்கிருமிகளை உருவாக்கிவிடும். காய்ச்சல் சளி தொந் தரவு அதிகரிக்கும்.

இதுபோன்ற சளி தொந்தரவை துளசி இலை கட்டுப்படுத்தும். இதற்காகவே புரட்டாசியில் விரதம் இருந்து (அசைவம் ஒதுக்கி) பெருமாள் கோவிலுக்கு போகும் வழக்கத்தை ஏற்படுத்தினர். மேலும் அந்த மாதத்தில் பெருமாள் கோவிலில் வழங்கப்படும் தீர்த்தமும் இயற்கை மருத்துவ குணத்துடன் தயாரிக்கப்படுவதால், துளசியும் தீர்த்தமும் பக்தர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை வெகுவாக அளிக்க உதவும்.

இதுபோன்ற பல்வேறு நல்ல விஷயங்கள் மக்களுக்கு பயன்பட வேண்டும் என்ற காரணத்தால்தான் புரட்டாசி மாதத்தை பெருமாளுக்கு உகந்த மாதமாக மாற்றி, மக்களுக்கு நன்மை பயக்கும் விரத முறைகளை அனுசரிக்க முன்னோர்கள் வழிகாட்டினர்.

இந்தமாதத்தில் சைவ உணவை மட்டும் சாப்பிட்டால் பல்வேறு நோய்களி லிருந்து மக்கள் காப்பாற்றப்படுவார்கள் என்ற நோக்கத் தில்தான் புரட்டாசியில் அசைவத்தை தவிர்த்தனர் நம் முன்னோர்கள். நாமும் இந்த மாதத்தில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறையை கடைப்பிடித்து உடலையும், மனதையும் காத்துக்கொள்வோம் வாருங்கள்.



# சந்திராஷ்டம நாட்களும் கணக்கிடும் எளிய முறைகளும்



நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பேப்பர் படிக்கும் பொழுதும் சரி, காலையில் தினசரி காலண்டரை காணும்போது சரி, அதில் ராசிபலன் பக்கத்தில் கீழே இன்று சந்திராஷ்டமம் பெறும் ராசி என்று போடப்பட்டிருக்கும். ஆனால் நமக்கு அதைப்பற்றி தெரியாததால் பெரும்பாலானோர் அதை பொருட்படுத்துவது இல்லை.

ஒரு ஜாதகத்தை எடுத்துக் கொண்டால் மிக முக்கியமாக இருப்பது லக்னமாகும். இதற்கு அடுத்த நிலையை பெறுவது ராசியாகும். பிறந்த ராசி என்பது நாம் பிறக்கும்போது சந்திரன் எந்த நட்சத்திரத்தில் இருக்கிறதோ, அந்த நட்சத்திரம் அமைந்துள்ள வீட்டைக் குறிப்பதாகும்.

சந்திரன் எந்த இடத்தில் இருக்கிறதோ அதைத்தான் நாம் ராசி என்கிறோம். நீங்கள் பிறந்த ராசிக்கு எட்டாமிடமான அஷ்டமஸ்தானத்தில் சந்திரன் வருமானால், அதையே சந்திராஷ்டமம் என்கிறோம்.

சந்திராஷ்டமம்=அஷ்டமம்+ சந்திரன்

உங்கள் ராசிக்கு எட்டாம் இடத்

தில் இருக்கும் இரண்டேகால் நாட் களைத்தான் ‘சந்திராஷ்டம’ காலம் என்கிறோம். அதிலும் குறிப்பாக நீங்கள் பிறந்த நட்சத்திரத்திற்கு 17வது நட்சத்திரத்தில் சந்திரன் சஞ்சாரம் செய்யும் காலம்தான் சந்திராஷ்டமம் ஆகும்.

பொதுவாக எட்டாம் இடம் என்பது சில தடைகள், மனச்சங்கடங்கள், இடையூறுகள் போன்றவற்றை ஏற்படுத்தும் இடமாகும்.

மேலும் சந்திரன் எட்டாம் இடத்தில் இருந்து நேர் பார்வையாக தனம், குடும்பம், வாக்குஸ்தானமான இரண்டாம் இடத்தை பார்ப்பதால் அந்த ஸ்தான அமைப்புகளும் பாதிப் படைகின்றன. ஆகையால் இந்த சந்திராஷ்டம தினத்தன்று முக்கிய சுபகாரியங்களை செய்ய மாட்டார்கள்.

மணமகன், மணமகள் ஆகிய இருவருக்கும் சந்திராஷ்டம் இல்லாத நாளில்தான் திருமண முகூர்த்தம் வைப்பார்கள்,

பால் காய்ச்சுதல், கிரகப் பிரவேசம், வளைகாப்பு போன்ற நிகழ்ச்சிகளுக்கும் சந்திராஷ்டமத்தை தவிர்த்து விடுவார்கள்.

புதிய முயற்சிகள் செய்ய மாட்டார்கள்,

புதிய ஒப்பந்தங்களை தவிர்த்து விடுவார்கள்.

முக்கிய பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட மாட்டார்கள்.

குடும்ப விஷயங்களையும் பேச மாட்டார்கள்.

ஏனென்றால் சந்திராஷ்டம தினத்தன்று சந்திரனால் நம் மனதில் சில மாற்றங்கள் உண் டாகின்றன.

எதிர்மறையான எண்ணங்கள் தோன்று கின்றன ஏனென்றால் சந்திரன் மனோகாரகன், மனதை ஆள்பவன். ஆகையால் நம் எண்ணங் களிலும் கருத்துகளிலும் நிதானமற்ற நிலை உண்டாகும்.

17ம் நட்சத்திரத்துக்கு வரும் சந்திரன். உங்களுக்குரிய சந்திராஷ்டம நாட்களை எளிதில் அறிந்துகொள்ள உதவும் பட்டியல் அருகில் கொடுக்கப்பட்டுள்ளது.

உங்கள் நட்சத்திரத்திற்கு 17வது நட்சத் திரத்தில் சந்திரன் வரும் நாளே, சந்திராஷ்டம தினமாகும். உங்கள் பிறந்த நட்சத்திரத்திற்கு சந்திராஷ்டம நட்சத்திரம் குறித்து விளக்கமாக பெட்டிச் செய்தி தரப்பட்டுள்ளது. அந்த குறிப்பிட்ட நட்சத்திர வரும் நாட்களில், நிதானமாகவும் கவனமாகவும் இருப்பது நலம் தரும்.

## சந்திராஷ்டம நாட்களை அறிய உதவும் பட்டியல்

| பிறந்த நட்சத்திரம் | சந்திராஷ்டம நட்சத்திரம் |
|---|---|
| அஸ்வினி | அனுஷம் |
| பரணி | கேட்டை |
| கிருத்திகை | மூலம் |
| ரோகிணி | பூராடம் |
| மிருகசீரிஷம் | உத்திராடம் |
| திருவாதிரை | திருவோணம் |
| புனர்பூசம் | அவிட்டம் |
| பூசம் | சதயம் |
| ஆயில்யம் | பூரட்டாதி |
| மகம் | உத்திரட்டாதி |
| பூரம் | ரேவதி |
| உத்திரம் | அஸ்வினி |
| அஸ்தம் | பரணி |
| சித்திரை | கிருத்திகை |
| சுவாதி | ரோகிணி |
| விசாகம் | மிருகசீரிஷம் |
| அனுஷம் | திருவாதிரை |
| கேட்டை | புனர்பூசம் |
| மூலம் | பூசம் |
| பூராடம் | ஆயில்யம் |
| உத்திராடம் | மகம் |
| திருவோணம் | பூரம் |
| அவிட்டம் | உத்திரம் |
| சதயம் | அஸ்தம் |
| பூரட்டாதி | சித்திரை |
| உத்திரட்டாதி | சுவாதி |
| ரேவதி | விசாகம் |

# பித்ரு பூஜையில் பெருமாள் கலந்துகொள்ளும் அதிசயக் கோயில்

இந்தியாவில் உள்ள பல்வேறு கோயில்களில் முன்னோருக்குரிய பூஜைகள் செய்யப்பட்டாலும் ஒரு சில கோயில்கள் பித்ரு பூஜைக்கென்று தனிச்சிறப்பு பெற்றவையாகவும் விளங்குகின்றன. ஆனால் பித்ரு பூஜை மட்டுமே நடைபெறும் வகையில் எந்த ஒரு தனிப்பட்ட கோவில்களும் இந்தியாவில் கிடையாது என்று நாம் நினைப்பது தவறு.

செங்கல்பட்டு அருகில் நென்மேலி என்ற கிராமத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணப் பெருமாள் சன்னதி பல நெடுங் காலமாக பெரியோர்களால் வணங்கப்படுகிறது.

மேலும் இச் சன்னதியில் உள்ள உற்சவ மூர்த்தி “ஸ்ராத்த ஸம்ரக்ஷண நாராயணர்” என்னும் திருநாமமும், இந்த கிராமத்திற்கு புண்டரீக நல்லூர், பிண்டம் வைத்த நல்லூர் என்றும் இந்த சன்னதியின் திருக்குளம் அர்கிய புஷ்கரணி, ஜீயர் குளம் என்றும் காசிக்கு நிகரான க்ஷேத்ரம் என்றும் சௌலப்ய கயா என்றும் வழங்கப்படுகிறது.

இத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளுக்கு மத்தியம் 12 மணி முதல் 1.00 மணிவரை சிரார்த்த பூஜை நடைபெறுகிறது. மற்ற நேரங்களில் எந்தவித பூஜையும் கிடையாது. இத்தலத்து பெருமாள் சிரார்த்த பெருமாள் என்று அழைக்கின்றனர்.

**தல வரலாறு:**

இத் திருக்கோயில் ஆற்காடு நவாப் காலத்தில் திவானாகப் பணி புரிந்த ஸ்ரீ யாக்ஞ வல்கியரைக் குருவாகக் கொண்ட சுக்ல யஜுர் வேதத்தை சேர்ந்த யக்ஞ நாராயண ஷர்மா சரஸ வாணி தம்பதிகள் இந்தப் பெருமானின் மீது ஆறாத பக்தி கொண்டிருந்தனர்.



மேலும் இவர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வரிப் பணத்தையும் தெய்வ காரியங்களுக்கு செலவு செய்து விட்டதால், அரச தண்டனையை ஏற்க விரும்பாமல் திருவிடந்தை என்னும் திவ்ய தேசத்து திருக்குளத்தில் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டனர்.

அவர்களுக்கு தங்கள் ஈமக் கடன்களை செய்ய வாரிசு இல்லையே என மனம் வருத்தத்துடன் மரணமடைந்தார்கள். அவர்களுடைய எண்ணத்தை எம்பெருமானே செய்ததாக பெருமாள் சாட்சியம் சொன்னார்.

அந்த திவானின் வேண்டுகோளுக்கு இணங்க சந்ததிகள் இல்லாருக்கும் ஸ்ராத்தம் செய்ய இயலாதவர்களுக்கும் தானே முன்னின்று ஸ்ராத்தம் செய்து வைப்பதாக எத்தனித்து குதப காலம் என்னும் பித்ரு வேளையில் (12 மணி முதல் 1 மணி வரை) ஒரு காலம் மட்டும் ஆராதனம் ஏற்று விரதமிருக்கிறார்.

## பெருமாளுடன் ஸ்ராத்தம்

இங்கு ஸ்ராத்தம் செய்ய விரும்புபவர்கள் பித்ரு வேளையில் நடக்கும் பூஜையில் தங்கள் பித்ருக்களுக்காக சங்கல்பம் செய்து கொண்டு சுவாமியிடம் சமர்ப்பிப்பதே ஸ்ராத்த சம்ரக்ஷணம் ஆகும்.

இத்தலத்தில் சிரார்த்தம் செய்பவர்களுடன் பெருமாளும் சேர்ந்து சிரார்த்தம் செய்வதாக ஐதீகம்.

## பிரசாதம்:

சிரார்த்தம் முடிந்ததும் ஸ்ராத்த ஸம்ரக்ஷண நாராயண ஸ்வாமிக்கு வெண் பொங்கல், தயிர் சாதம் அதனுடன் பிரண்டையும் எள்ளும் சேர்த்த துவையலும் நிவேதனமாக படைக்கப்படுகிறது.

இத்தலத்தில் சிரார்த்தம் செய்த அன்பர்களுக்கு அந்த பிரசாதத்தையே மதிய உணவாகவும் வழங்கப்படுகிறது.

வெண் பொங்கள், தயிர் சாதம், பிரண்டை எள்ளு சேர்த்த துவையலை மட்டுமே ஏற்று பித்ருக்களை திருப்தி செய்கிறார் ஸ்ராத்த ஸம்ரக்ஷண நாராயணர்.

## பலன்கள்:

தினமும் நடை பெறும் இந்த பூஜையில் அவரவர் பித்ருக்கள் திதியிலோ, அமாவாசை, ஏகாதசி போன்ற திதிகளிலோ அல்லது என்று முடியுமோ அன்று சிரார்த்த பூஜையில் கலந்து கொள்ளலாம். ராமேஸ்வரம், காசி, கயா போன்ற தலங்களில் ஸ்ராத்தம் செய்த பலனைக்கொடுக்கும்.

## அனாதைகளுக்கும் சிரார்த்தம்:

அனாதையாக மரணமடையும் அனைவருக்கும் இத்தலத்து பெருமாளே சிரார்த்தம் செய்வதாகவும் கூறப்படுகிறது.




## முன்பதிவு:

இத்தலத்தில் சிரார்த்த பூஜை செய்வதற்கு முன்பதிவு செய்துவிட்டுச் செல்ல வேண்டும். சிரார்த்தம் முடிந்ததும் வழங்கப்படும் பிரசாதத்தை முன்கூட்டியே தயாரிக்க ஏதுவாக அன்பர்கள் முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும் என்று ஆலய நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

## இத்தல முகவரி:

Sri Sampath Bhattacharyar,
Brahmana street, Nenmeli and post,
Via Nandham, Chengalpat - 603002.
Kanchipuram District.
Ph : 27420053.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu - 600081. Editor: R S ROSHINE



SARAVANA STORES GOLD PALACE
சரவணா ஸ்டோர்ஸ்®
கோல்டு பேலஸ் - டெக்ஸ்டைல்ஸ்
தி.நகர்
மாம்பலம் ரயில் நிலையத்திலிருந்து முதல் கடை
வேளச்சேரி
விஜயநகர் பஸ்நிலையம் மிக அருகில்
அசத்தலைக்கும்
தீபாவளி
கலக்ஷன்ஸ்
டெக்ஸ்டைல்ஸ்
பிரிவில் ரூ.3000 மற்றும்
அதற்கு மேல் வாங்கும்
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும்
Gift Voucher
வழங்கப்படும்!
தி.நகர்
28, ரெங்கநாதன் தெரு,
தி.நகர், சென்னை - 600017
044-2431 2666, 2435 0357
மாம்பலம் ரயில் நிலையத்திலிருந்து முதல் கடை
வேளச்சேரி
37, வேளச்சேரி-தாம்பரம் மெயின் ரோடு,
வேளச்சேரி, சென்னை - 600 042
044-4959 5377, 4959 5477
விஜயநகர் பஸ்நிலையம் மிக அருகில்

ARULTHARUMDEIVAM

PRGI: TNBIL/25/A1573

அன்றாடச்
செய்திகளை
துல்லியமாக
தரும்

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com









எந்தவித
மறை முக
கட்டணமும் இல்லை
சந்தா, சப்ஸ்கிரிப்ஷன் இல்லை,
உங்கள் பகுதியில் நடைபெறும்
நிகழ்ச்சிகளை எங்களுக்கு
தெரியபடுத்துங்கள், நமது
இ–பேப்பரை படித்து
பயன்பெறுங்கள்,




**Whatsup no.7092894609**

TamilnaduEpaper.com